# ரமணோதயம்

ஏப்ரல் 2017
காலாண்டு

ஆராதனை இதழ்
விலை ₹ 20



Om Namo Bhagavathe Sri Ramanaya

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள்

## அறுபத்து ஏழாவது ஆண்டு மஹாராாதனை

## RAMANA KENDRA TRUST

41, Alarmelmangapuram, Mylapore, Chennai - 600 004.
Tel : 24611397 Cell : 99404 18375

## ARADHANA - MON 24TH APRIL, 2017



## ARADHANA CELEBRATION

- 24th April 2017, Monday

MORNING

6.00 a.m. : நாதஸ்வரம்
7.00 a.m. : Mahanyasam, Ekadasa Rudra Japam, Abhishekam
10.00 a.m. : Sri Ramana Sahasranamam Archana
11.00 a.m. : Tamil Parayanam: "உள்ளது நாற்பது, அக்ஷர மணமாலை,"
12.15 p.m. : Annadhanam, Deeparadhana

Evening

4.00 p.m. : ப்ரதோஷ பூஜை
5.30 p.m. : ஆத்ம ரமணா - Harikatha by Smt.Shyamala Ramachandran
6.45 p.m. : 'Thiru Veedhi Ula' of Sri Bhagavan around Mada Veedhies,Mylapore
7.15 p.m. : "Aksharamanamalai" - Group chanting
8.47 p.m. : Merger of Sri Bhagavan in Arunchala -
(ஆன்மாவாம் அருணாசலனோடு அண்ணல்
ரமணர் ஒடுங்கிய தருணம்)

(Donations towards ANNADHANAM (Rs. 40,000) EKADASA RUDRAJAPAM (Rs. 8,000) Flowers to Bhagavan and decorations (Rs. 10,000/-) RATHAYATHRA (Rs. 25,000/-) Pandal, Lighting (Rs. 10,000/-) are gratefully accepted in part or in full. Donations are exempt u/s 80G of IT Act, cheques/drafts may be drawn in favourof Ramana Kendra Trust)

**Laksharchana - From 15.04.2017 to 21.04.2017 (7 days only)**

உதயம் 16 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 3

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஆராதனை இதழ்
ஏப்ரல் 2017

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2017


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | இறங்கி, வண்டி மாற வேண்டும் | பிர. கிரிதர ஜெகதீஷ் | 21 |
| 3 | பகவான் காட்டிய பாதை | இசைக்கவி ரமணன் | 29 |
| 4 | அக்ஷர மணமாலை - ஒரு தத்துவக் கருவூலம் - பகுதி 6 | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 43 |
| 5 | பேரமைதி நிலவிய திருநாட்கள் - 3 | மௌனி சாது | 52 |
| 6 | இனிவரும் திருநாட்கள் | | 63 |
| 7 | பகவான் பகர்ந்த தாலாட்டு கீதம் | கௌதமன் | 64 |
| 8 | ரமணாயனம் | க்ரேஸி மோஹன் | 68 |
| 9 | செய்திகள் | | 72 |


முன்அட்டைப் படம்: ஸ்ரீரமணேஸ்வர மஹாலிங்கம்

பின்அட்டைப் படம்: உண்ணாமுலை உடனுறை ஸ்ரீஅருணாசலேஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேகக் காட்சி – 6 பிப்ரவரி 2017

# ஆசிரியர் உரை

## வெண்பலகையில் கரும்புள்ளி

அப்பள மாவைத் தயாரித்துக்கொண்டு, பின்னர் தன் ஒருத்தியால் அனைத்தையும் இடமுடியாமல், 'அப்பளம் இடவா' என்று அழைத்த அன்னைக்கு, "இந்த அப்பளம் எதற்கு? நான் அத்யாத்ம அப்பளத்தையே தயாரிக்கும் முறையைச் சொல்கிறேன்" என்று பகவான் இட்டுத்தந்த அத்யாத்ம அப்பளம், இதுவரை எந்த ஞானாசிரியராலும் எழுதப்படாத அற்புதமான உவமைக் கருத்துடன் அமைந்து, பயின்றோர் அனைவருக்கும் ஞானப்பசியைப் பூர்ணமாகத் திருப்தி செய்யும் எழிலான 'சிறுகாவியம்'. "உலகச் சுவைகளை 'வேண்டாம்' என ஒதுக்கி ஆன்மிகச் சுவையையே ருசிப்பாயாக!" என்னும் உயரிய கருத்து அமைந்தது. இதனை ஒரு சுருக்கமான பொழிப்பாகக் கூறிடின் "நாம் கொண்டுள்ள உடலையை ஆத்மாவாக எண்ணிக் கொண்டிருக்கும் தேகாபிமானமே அப்பளத்துக்கு ஆரம்பமான உளுந்து; 'நான் யார்?' என்னும் உள்நோக்கிய விசாரணையே இதனைப் பொடிக்கும் யந்திரமான திரிகை. இதனை உடைத்துப் பொடிப்பதானது அனாத்ம வஸ்துக்களை 'நேதி, நேதி' (இது நானல்ல, நானல்ல) என்னும் நித்யாநித்ய விவேகம்; ஞானிகளுடன் கொள்ளும் தொடர்பே பிரண்டை ரசம். சாதனை சதுட்டயத்தில் நித்யாநித்ய வஸ்து விவேகத்திற்கு அடுத்தபடியாகக் கூறப்படும் 'ஸம தமாதி ஷட்க சம்பத்து' (அறுவகைப்பேறுகள்)

சமம் (பூர்ண அமைதி), தமம் (புலன் கட்டுப்பாடு), உபரதி (உலக வஸ்துக்களை ஒதுக்கும் துறவுநிலை, திதிக்ஷா (ஒருமுகக் கவனம்), ஸமாதானம் (அலையா மனம்) மற்றும் ஸ்ரத்தை – இவற்றை அப்பளமாவில் சேர்க்க. இந்த ஆறு குணங்கட்கும் உவமையாவன: ஸமம் என்னும் சீரகம், தமம் என்னும் மிளகு, உலகப் பற்றுக்களால் ஈர்க்கப்படா மனமே திதிக்ஷா என்னும் கல் உரல். அந்தர்முக (உள்நோக்கிய) பார்வையே உலக்கை. அந்த உண்முகப் பார்வையுடன் 'நான் ப்ரம்மம்' என்னும் மஹா வாச்யத்தில் பூரண நம்பிக்கையான ஸ்ரத்தையோடு செய்யப்படும் ஆத்ம விசாரணையே உரலில் இடிக்கும் செயல். அப்படி இடித்தபின் பேதம் எதுவும் இல்லாமல், ஒன்றாகிய அந்த மாவை, சமாதி என்ற பலகையின்மேல் வைத்து, 'சாந்தி' என்னும் அப்பளக் குழவியால் அப்பளம் இடவேண்டும். அந்த ஜீவாத்ம ஐக்ய பாவத்தினின்றும் சற்றும் நழுவாத அத்வைத நிலையே பாத்திரம் ஆகும். எப்போதும் விளங்கிக் கொண்டிருக்கும் பிரம்மமே நெய். ஞானம்தான் அதனைக் காய்ச்சும் அக்நி. மனம்-உடல் என்னும் தளைகளுக்குள் கட்டுண்ட ஜீவனை, பரமாத்மா அநுபவத்தில் பரிணமிக்க வைப்பதே அப்பளத்தையும் பொரித்தல். அஹம் ப்ரஹமாஸ்மி – 'நானே பரம்' என்ற தன்மய உணர்விலேயே எப்போதும் நிலைத்திருப்பதே, அப்பளத்தைத் தினமும் புசிப்பதாகும்.

பகவான் ஸத்குருவாக வந்து, இங்ஙனம் அப்பளம் இடலையே உதாரணமாக வைத்து ஆத்ம ஞானத்தைத் தருகிறார்

அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபரனாகிய கொள்கை

என்று மணிவாசகர் கூறுவதுபோல், அந்தப் பரமாத்மாவே பகவான் உருவில் வந்து செய்கின்ற உபதேசம். நித்யாநித் வஸ்து விவேகம் (எது

*நிரந்தரமானது – எது நிலையற்றது என்று பகுத்தறியும் விவேகம்) ஸமதமாதி ஷட்க ஸம்பத்தி (ஸமம், தமம் முதலிய ஆறு உயர் பண்புகள் – நாம் முன்பு கண்டவை) ஆகியவற்றை நமது ஆத்மீக அப்யாஸத்தில் உள்ளடக்கி, உலகப் பற்றுக்களை ஒதுக்கிக் கட்டறுத்தல். எல்லாம் அறுபட்டு நம்மை விட்டு நீங்கும்போது ஞானம் முகிழ்க்கிறது.*

*குருநாதன் ஞானம் அருளிய காட்சியை அருணகிரிநாதர் அழகுற விளக்குகிறார்:*

*. . . . .பஞ்சபூதமும் அற்று*
*உரை அற்று உணர்வு அற்று உடல்அற்று*
*உயிர்அற்று உபாயம் அற்று*
*கரையற்று இருள்அற்று எனதுஅற்று*
*இருக்கும் அக்காட்சியதே.*

*நம்மிடம் பொருட்கள் வந்து சேர்வதைத்தான் நாம் மகிழ்ச்சியாகக் கருதுகிறோம். அருணகிரியோ, இங்கு, தன்னிடம் இருந்தவை அனைத்தும் மறைவதையே வரிசையாக 'அற்று, அற்று' என்ற சொற்களால் கூறுகிறார். நம்மிடம் இருப்பது நம்மை விட்டுப் போவது ஒரு மகிழ்ச்சியான விஷயமா என்ன?*

*ஒருவனுக்கு வயிற்றுவலி, ரத்தக் கொதிப்பு, நீரிழிவு போன்ற பல வியாதிகள் உள்ளன. பல மருத்துவர்களிடம் சென்று வருகிறான். அதனால் பல பிரச்சினைகள். அவனது நண்பர் ஒருவர் கூறுகிறார், "இங்ஙனம் ஒவ்வொன்றிற்கும் தீர்வு தேடி பல்வேறு வைத்தியர்களிடம் செல்லாதே! நேராக டாக்டர் ரமணனிடம் போ. எல்லாவற்றிற்கும் தக்க வைத்தியத்தினை அவர் செய்வார்" என்கிறார். அங்ஙனமே அவரிடம் சிகிச்சை பெற்றான். மறுமுறை அந்த நண்பரைக் கண்டபோது, "நண்பரே! அந்த டாக்டர் ரமணன் மிகச்சிறந்த வைத்தியர். அவரது வைத்தியத்திற்குப்பின் என் வயிற்றுவலி போயிற்று.*

எனது நீரிழிவு போயிற்று, எனது ரத்தக்கொதிப்பு நீங்கியது” என்று வரிசையாக ‘போயிற்று, போயிற்று’ என அடுக்குகிறான். அதேபோன்று, நாம் படும் அத்தனை தொல்லைகட்கும் அடிப்படையாக உள்ள ‘அகந்தை’ எனும் பிணியை நீக்க ஆத்ம விசாரம் என்னும் மருந்தினை அளிக்கிறான் நமது சத்குரு. உடனே எல்லாத் தொல்லைகளும் அகல்கின்றன.

‘எல்லாம் அற, என்னை இழந்த நலம்’ என்று அருணகிரியார் இந்நிலையை கந்தர் அநுபூதியில் கூறுகிறார்.

நமக்கு ‘நான் பரம் – நானே ஆத்மா’ என்ற நினைவு ஆட்கொள்ளாதவரை, ‘இது வேண்டும், அதுவேண்டும்’ என்று பல்வேறு பொருட்களைச் சேர்த்துக்கொண்டு இருக்கிறோம். அறிவுள்ள ஞானியரால் ஒதுக்கப்பட்ட பொருட்களை ‘வேண்டும், வேண்டும்’ என்று சேர்த்துக்கொண்டு இருக்கிறோம்.

புள்ளிய தோலாடை புனைந்துஅரவப் பூண் அணிந்த
வெள்ளிய செங்கண் விடையான் அடிக்கமலம்
உள்ளிய மெய்யன்பு உடையார் அருவருத்துத்
தள்ளிய செல்வம்

என்று ஞானியர் குறிப்பிடுகின்றனர். “புலித்தோலையும் பாம்பினையும் அணிந்த, வெண்ணிறத்துடன் செங்கமலம் போன்ற அழகிய கண்களையும் உடைய சிவபிரான் திருவடிகளை எப்போதும் நினைக்கின்ற மெய்யன்பர்கள், ‘வேண்டாம்’ என அருவருத்துத் தள்ளிய செல்வத்தினை” இடையறாது ‘இதுதான் சாஸ்வதம்’ என எண்ணி, பொருட்செல்வத்தைத் தேடுகிறோம்.

நாம் மேற்கண்ட கந்தர் அலங்காரப் பாடலில் சத்குருவின் அருளால் ஞானம் பெற்றவுடன் எங்ஙனம் ஒவ்வொன்றாக விடுபடுகிறது என்பதைக் காண்போம்.

*பஞ்சபூதமும் அற்று:* அகண்டம் முழுவதிலும் பஞ்சபூதங்கள் படர்ந்து இருந்தாலும், சத்குருவிடம் ஞானோபதேசம் பெற்றவுடன் இந்த பஞ்சபூதக் கட்டு அறுபடுகிறது.

*உரை அற்று:* இறைவன் சந்நிதானத்தில் நுழைவாயில் தான் சுத்த மௌனம். அந்த ஞானத் தலைவாசலுக்குள் நுழைந்துவிட்டால் பேச்சுக்கே இடமில்லை. சுத்த மௌனம் சம்பவிக்கும்.

சித்த மௌனம் மனோ வாக்கெலாம் மௌனம்
சுத்த மௌனத்தில் தோன்றும் பராபரமே

என்று தாயுமானவர் பாடுவார்.

*உணர்வு அற்று:* இங்ஙனம் பேச்சு அடங்க வேண்டும் எனில் எண்ணுகிற எண்ணங்கள் அடங்க வேண்டும். இதற்கு முதல்படி, பகவான் புத்தர் உபதேசித்தபடி, 'mindful living' என்பதைப் பழக வேண்டும். சிந்தனை தறிகெட்டு ஓடாமல் அடங்க, நாம் எங்கே பழகுகிறோமோ, அங்கே உள்ளவற்றை மட்டும் சிந்திக்க வேண்டும். அதற்கு மேல் போகாதபடி, கட்டுப்படுத்துக என்கிறார் ஞானியர்.

தேடாதுற்ற திருவருள் நிதியம் மனத்து
இயக்கம் தீர்த்துஅருள்

என்கிறார் பகவான்.

சாப்பிடும்போது, சாப்பாட்டைப் பற்றி மட்டும் நினையுங்கள். நடக்கும்போது உங்கள் எண்ணம் நகர்கின்ற பாதங்கள் மீது மட்டும் இருக்கட்டும். பல் தேய்க்கும்போது பிரஷ்ஷின் மீது மட்டுமே இருக்கட்டும். அப்புறம், படிப்படியாக எந்த இடத்தில் இருக்கிறோமோ, அந்த இடத்துச் சிந்தனையும் அற்றுவிடும்; உணர்வும் அற்றுவிடும். வாக்கு மௌனம் வருகிறது. மனோமௌனம் வருகிறது. சரீர வாசனை அற்றுப் போகிறது. மனம் இன்பதுன்பங்களில் தன்னை

ஈடுபடுத்திக் கொள்ளாமல் சாட்சியாக மட்டும் இருந்து அனுபவிக்கிறது.

உடல் அற்று, உயிரும் அற்று: வாக்கும் போய், மனமும் போனபின், சரீர வாசனை கழன்று, 'நான்-நான்' என்ற அகங்காரம் அழிந்து விடுகிறது.

உபாயம் அற்று: ஜீவபோதம் போகாத வரையில் 'தான் லௌகிக வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும்' எனப் பலப்பல முயற்சிகளைச் செய்கிறோம். இந்த ஜீவபோதமே அழிந்து போனபின், கருவிகட்கும், முயற்சிகளுக்கும் என்ன தேவை? சமைத்து முடித்தபின், அடுப்பினை எரிய விட்டுக்கொண்டு இருப்போமா என்ன! இங்கு எந்த சாதனத்திற்கும் தேவையே இல்லை. இமயமலைக்குச் செல்லும்போது, நாம் அணிந்து செல்லும் கம்பளி, ஸ்வெட்டர் முதலியவற்றை சென்னை போன்ற வெப்பப் பிரதேசத்திற்கு வந்தபின் கழற்றி விடுகிறோம் அல்லவா! அதுபோன்றே எனது சத்குரு வந்து ஞான அக்நி வழங்கியவுடன் பிரபஞ்சம் எனும் குளிர் போனது; உலக வாசனை போயிற்று. வாக்கு அடங்கி மனோமௌனமும், சுத்த மௌனமும் வந்தது. இதுவரை நான் பின்பற்றி வந்த சாதனைக்குமே தேவையற்றுப் போனது என்கிறார் அருணகிரியார்.

கரை அற்று: ஜீவபோதம் அகன்று, உபாயங்கள்—சாதனைகள் அனைத்தும் அற்றுப் போகிறவரை, அப்யாசத்தை மேற்கொள்கிறோம். 'அத்வைத ஞானம்' அடைந்த உடன் இந்த எல்லைகள் யாவும் அற்றுப் போகின்றன. நமது முயற்சிகள் எல்லாவற்றிற்கும் காலம் ஒரு கரை; இடம் ஒரு கரை. இந்தக் கரைகட்கு உட்பட்டே சாதனைகளைச் செய்துகொண்டு வருகிறோம். அத்வைத ஞானம் பெற்றவுடன் காலம்—இடம் அனைத்தையும் கடந்து விடுகிறோம். எல்லையற்ற பரவெளிக்கு நாம் வந்து விட்டோம்.

*தீரமில் அகத்தில் தேடியுன் தனையான்*
*திரும்பஉற்றேன் அருள் அருணாசலா*

*– மணமாலை, 45*

*[தீரம்: கரை, எல்லை; தீரமில் அகம்: எல்லையற்ற ஆத்மா]*

*ராப்பகல் இல்லா வெறுவெளி வீட்டில்*
*ரமித்திடு வோம்வா அருணாசலா*

*– மணமாலை, 91*

*[ராப்பகலில்லா வெறுவெளி வீடு: காலத்தைக் கடந்த பரமாத்ம நிலை]*

*என்று கால-தேசக் கரைகளைக் கடந்த நிலையைப் பகவான் குறிப்பிடுகிறார்.*

*இருள் அற்று: இவ்வுலகில் நாம் காணும் பௌதிக ஒளி எல்லாம் சுத்த ஒளி அல்ல; இருள் படர்ந்த ஒளிதான். அகக்கண் திறக்காமல் புறக்கண்ணைத் திறந்து பயன் ஒன்றும் இல்லை. ஞானிகள் தங்கள் புறக்கண்களை மூடி, அகக்கண் கொண்டு இறைவனைக் கண்டார்கள்.*

*எனது அற்று: ஜீவபோதம் அழிந்து, அஞ்ஞான இருள் அகன்று எல்லையற்ற பரமாத்மாவில் கரையும்போது என்ன ஆகிறது? பகவான் கூறும் 'அந்தமிலாக் கண்' திறக்கிறது.*

*எனது அற்று இருக்கும் அக் காட்சியதே: 'நான்' என்கின்ற அகங்காரமும், 'எனது' என்கின்ற மமகாரமும் போனபின், இதுவரை இறைவன் வேறு - நான் வேறு என்று இருந்த பேதபாவம் ஒழிந்துபோய், 'நான்-அவன்' இரண்டும் ஒன்றுகின்றன.*

*"நான் வேறு எனாதிருக்க நீவேறு எனாது இருக்க அருள்வாயே" என்பது அத்வைதப் பிரார்த்தனை.*

இதுவரை, 'எல்லாம் அற என்னை இழந்த நலம்'. இதுவே, பகவான் அப்பளப் பாட்டில் கூறும் பொரித்த அப்பளம்.

"நீ மனைவி மக்களை நினைந்து அழுவதில் பத்தில் ஒரு பங்கு தீவிர தாபத்துடன் கடவுளைக் காண்பதற்காக அழுதால் அவனை உடனடியாகக் காண்பாய்" என்பார் ஸ்ரீராமகிருஷ்ணர். பகவானும் இத்தகைய உறுதிமொழியை மறைமுகமாகக் கூறினார். திருமதி எலியனார் பாலின் நோயி, இரண்டு மாதங்கள் பகவான் திருக்கண்ணோக்கத்தில் திளைத்தபின்னர், தாய்நாட்டிற்குத் திரும்ப வேண்டியதை எண்ணித் தாங்க முடியாமல் அழுதபோது, பகவான் அவரிடம் "வருந்தாதே! நீ எங்குச் சென்றாலும் நான் உன்னுடன் எப்போதும் இருப்பேன்" என உறுதி அளித்தார். அரிய சந்தர்ப்பங்களில் மட்டுமே பகவான் அருளும் உறுதிமொழி இது. தகுதிப் பக்குவர்க்கு அளிக்கும் பிரமாணப் பத்திரம்.

இதுபோன்றே முனகால வெங்கடராமையாவின் குடும்பத்தைச் சேர்ந்த 10 வயது சிறுமி பகவானின் அடிபணிந்தபோது, அவளது நோட்டுப் புத்தகத்தில் 'ஓம் நமோ பகவதே ஸ்ரீரமணாய' என்னும் மந்திரத்தை எழுதி "இதை நீ தினமும் பாராயணம் செய்" என்று கூறினார். அன்றிலிருந்து அதனை இடைவிடாமல் அச்சிறுமி உச்சரித்து வந்தாள். பகவானின் திருக்கரத்தாலேயே மந்திர தீக்ஷை இவ்வாறு பெற்ற இச்சிறுமி பெற்ற பாக்யம் என்னே! பத்து வயது சிறுமிக்கு மந்திரோபதேசம் பெறும் உயர்தகுதி எப்படி வந்திருக்கும்! கண்ணன் பகவத் கீதையில் கூறுவதுபோல்

"ஶுசீனாம் ஸ்ரீமதாம் கே³ஹே
யோகப்⁴ரஷ்டோபி ஜாயதே

– பகவத் கீதை, 6-41

(முற்பிறவியில் செய்த யோகவிசாரப் பயிற்சிகளினால் இப்பிறவியில் ஆத்மார்த்தமான சூழ்நிலையில் பிறந்து, உயர்நிலையை அடைகிறான்) இந்நிகழ்ச்சி அமைகிறது.

ஏழே வயதான ஞானசம்பந்தர், கற்றறிந்த மூத்த சமணத் துறவிகளை வெற்றி கொள்ள முடியுமா என்று மங்கையர்க்கரசி அஞ்சியபோது

பானல்வாய்ஒரு பாலன்ஈங்கிவன் என்றுநீபரிவு எய்திடேல்
ஆனைமாமலை ஆதியாய இடங்களில்பல அல்லல்சேர்
ஈனர்கட்குஎளி யேன்அலேன்திரு ஆலவாய்அரன் நிற்கவே.

(என்னைச் சிறுவன் என்று எண்ணி நீ அஞ்ச வேண்டாம். ஆலவாய் பெருமான் என் இதயத்துள் நிற்பதால் நான் இச் சமணர்க்கு இளைத்தவன் அல்லன்). பகவான் எதிரில் இப்பாடல் பாடப்பட்டபோது, பகவான் "சம்பந்தர் எப்படி இவ்வாறு அச்சமில்லாமல் தீரத்துடன் இருக்க முடிந்தது? அவரே ஒவ்வொரு பாடலின் இறுதியில் இப்பதிகத்தில் கூறுவதுபோல், 'ஆலவாய் அரன் அவருள் நிற்பதால்தான்'" என்று விளக்கினார்.

கங்கையில் ஓடுகின்ற நீர் எப்போதும் ஓடிக்கொண்டு இருக்கிறது. ஆனால் அதை நிரப்பி வைக்கிற பாத்திரம் வெவ்வேறு வடிவில் இருக்கலாம். உருவம் வெவ்வேறாக இருந்தாலும் உள்ளே இருக்கின்ற தண்ணீர் ஒன்றுதான். அதுபோலவே இறைவனை அடைவதற்கு அன்பர்கள் பலப்பல வழிகளில் பல உருவங்களில் அவனை வழிபடுகின்றனர். இறைவன் என்பது நித்திய தத்துவம்; ஆனால் அவனைப் பாவிக்கின்ற உருவமும் என்றைக்கும் நித்தியமானது என்று எண்ணிக் கொள்ளக் கூடாது. நிரந்தரத் தன்மை அந்தத் தத்துவத்திற்கே அன்றி உருவத்திற்கு அன்று. 'எனது தியானத்தால் தோன்றுகின்ற சிவபிரான், என் தியானம் முடிந்தவுடன் மறைந்து விடுகிறானே! அவனை எப்படி நிரந்தரமாக நான் காண்பது?' என்று

வருந்திய உமாதேவி என்ற போலந்து நாட்டு சாதகர்க்கு, பகவான், “எது தோன்றி மறைகிறதோ அது நிரந்தரமான ஒன்று அல்ல; என்றும் நிலையாய் உள்ள ஆத்மாவில் உன் மனதைத் திருப்பு” என்று உபதேசித்தார்.

தோன்றி மறையாது ஒளிரும்
பூன்றமாம் அஃதே பொருள்

என்று ‘உள்ளது நாற்பது’ பாடலில் பகவான் உபதேசிக்கிறார்.

ஒரு காட்டில் வேடன் ஒருவன் இருந்தான். அவன் பல விலங்குகளை வேட்டையாடி வந்தான். அப்போது அந்தக் காட்டின் வழியே வந்த ஒரு துறவி அவனிடம் “ஏன் இப்படி வேட்டையாடுகிறாய்? எப்போதும் கொலை செய்து வாழும் வாழ்வு ஒரு வாழ்வா?” என்றார். வேடன் “காடு நிறைய விலங்குகள் இருக்கும்போது எனக்குக் குறைவில்லாமல் உணவு கிடைக்கிறதே! நான் ஏன் மற்றவற்றைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்?” என்றான்.

“உன்னைப் போலவே புலி, சிங்கம் முதலிய விலங்குகளும் நினைத்துக்கொண்டு இருக்கின்றன. காடு முழுவதும் மான் முதலிய விலங்குகள் உள்ளபோது நமக்கு என்ன குறை என்று நினைக்கின்றன. தங்களை வேட்டையாட நீ உள்ளாய் என்ற நினைப்பே அவைகளுக்கு வருவதில்லை” என்றார் அவர்.

வேடன், “அவற்றை நான் கொன்று விடுகிறேன். அவற்றின் வாழ்வு முடிந்துவிடுகிறது. அதனால் எனக்கு என்ன பிரச்சினை?” என்றான்.

“உன் வாழ்க்கை இப்படியே ஆகவா இருக்கும்? இப்படி வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த உன் அப்பா, தாத்தா எல்லாம் என்ன ஆனார்கள்?” என்று கேட்டார்.

“அவர்கள் எல்லாம் செத்துப் போனார்கள்” என்றான் அவன்.

“அப்படியே நீயும் ஒருநாள் செத்துப் போவாயே! விலங்குகளின் உடலில் இருந்து உயிரை நீ நீக்குவதுபோல, உன்னையும் உயிர் இல்லாமல் ஆக்க ஒருவன் வருவான்” என்றார் அவர்.

அதைக்கேட்ட வேடன் பயந்துபோய், “என் உயிரைப் பறிக்க வரும் அவன் யார்?” என்று கேட்டான்.

“அவனுக்குத் தான் எமன் என்று பெயர். அவன்தான் எல்லா உயிர்களையும் கொல்கிறான். எப்படி உன் கையில் உள்ள வேலால் நீ விலங்குகளைக் கொல்கிறாயோ, அதுபோலவே வியாதி, விபத்து போன்ற பல கருவிகளால் அவன் உன்னைக் கொன்றுவிடுகிறான்” என்றார் அவர்.

அதைக் கேட்ட வேடன் “விலங்குகளை நான் கொல்வதுபோல் என்னை நோயும், முதுமையும் கொல்லுமே? அதை நினைக்கும்போதே அச்சமாக உள்ளது” என்றான்.

பெரியவர், “பயப்பட வேண்டாம்! அந்தப் பயம் போக ஒரு வழி உள்ளது. இந்தக் காட்டின் எல்லையில் ஆலமரக் குகையில் ஒரு முனிவர் உள்ளார். அவரிடம் போய் உபதேசம் வாங்கிக்கொள்” என்றார்.

“அவரை எப்படிச் சந்தித்து உபதேசம் பெறுவது?” என்று கேட்டான் வேடன்.

“அவர் குகையில் இருந்து வெளியே வரும்போது, ‘குரு! குரு!’ என்று காலில் விழு. அவர் என்ன சொல்கிறாரோ அதையே மந்திரமாக வைத்து எப்போதும் சொல்லிக் கொண்டிரு. உனது மரணபயம் நீங்கும்” என்றார்.

மறுநாள் முனிவர் மரத்தின் அடியில் தியானத்தில் அமர்ந்திருந்தார். பின் வெளியே வரத் தொடங்கினார். அவரை நேருக்குநேர் சந்திக்கத் துணிவற்ற வேடன்,

மரத்தின் பின் மறைந்துகொண்டு, கீழே விழுந்து, "குரு! குரு!" என்றான். அவன் சரியாக உச்சரிக்காமல், அதுவும் மரத்தின் மறைவில் இருந்து சொன்னதால், அது முனிவரின் காதில், "குர்! குர்!" என்று கேட்டது. அதைக்கேட்ட முனிவர், காட்டுப்பன்றி ஒன்று ஒலி செய்கின்றது என்று எண்ணி, "பன்றி! பன்றி!" என்றார்.

அந்தப் 'பன்றி' என்ற வார்த்தையைக் கேட்ட வேடன் அதையே உபதேசமாக ஏற்றுக்கொண்டு, வீட்டுக்கு வந்து 'பன்றி, பன்றி" என்று தியானத்தில் அமர்ந்து விட்டான். உயிர் நீங்கும் என்ற அச்சத்தால் ஜபம் செய்ய அமர்ந்த அவன், நாளாக நாளாகத் தன் சூழ்நிலை, அச்சம் அனைத்தையும் மறந்து யோக நிலையில் தீவிர தியானத்தில் மூழ்கினான். அவனது தீவிர பக்தியைக் கண்ட மஹாவிஷ்ணு, வராஹ உருவத்தை எடுத்துக்கொண்டு அவன் முன் பிரத்யட்சமானார்.

'நீ யார்? எதற்காக இங்குத் தோன்றினாய்?' என்று கேட்டான் வேடன்.

"நீ என்னை இடைவிடாமல் தியானித்ததால் தோன்றினேன்". உனக்கு என்ன வேண்டும்?" என்றார் திருமார்.

'எனக்கு ஒன்றும் தெரியாது! உன்னிடத்தில் என்ன கூறவேண்டும் என்பதை என் குருநாதரிடம் கேட்டுச் சொல்கிறேன்' என்று வராகத்தை இழுத்துக்கொண்டு முனிவர் முன் சென்றான். முனிவரிடம், 'ஸ்வாமி! இப்போது இந்தப் பன்றி என் முன் தோன்றி என்ன வேண்டும் என்று கேட்கிறது. நான் இதனிடம் என்ன கேட்கட்டும்?' என்று வினவினான்.

கண்விழித்துப் பார்த்த முனிவருக்கு, எந்த உருவமுமே புலப்படவில்லை. "பன்றியா? என் கண்ணுக்குப் பன்றி எதுவும் தெரியவில்லையே!" என்றார். வேடன், "அப்படியா?" என்றுகேட்டு, "என்

குருநாதருக்கு நீ தெரியவேண்டும்" என்று காட்டுப் பன்றியிடம் கோபமாகக் கூறினான். அடியாருக்கு அருளும் பரந்தாமன் உடனே முனிவர்முன் சங்கு சக்கரம் வைஜயந்தி மாலையுடன் ஜாஜ்வல்யமான வராஹ மூர்த்தியாகத் தோன்றினான். பேரானந்தத்தில் ஆழ்ந்த முனிவர், வேடன் காலைக் கட்டிக்கொண்டு, "அப்பா! நீயே என் குருநாதன்" என்று பணிந்தார்.

சங்கரர் சிவாநந்த லஹரியில்

ப⁴க்திஃ கிம் ன கரோதி-அஹோ

வன-சரா: ப⁴க்தாவதம்ஸாயதே

என்று பாடுகிறார்.

(தீவிர பக்தி என்னதான் செய்யாது? காட்டில் திரியும் வேடன் பரபத்தியினால் பக்தர்களுள் தலைசிறந்தவன் ஆனானே!) மனத்தை அடக்கிய தீவிர ஒருமைப்பாட்டினால் இது சித்திக்கிறது.

பகவானிடம் வரும் அன்பர்கள் அடிக்கடி கேட்கும் கேள்வி, "மனத்தை அடக்க எளிய வழி எது?" என்பதாம். பகவான் கூறும் விடை, "மனத்தை அடக்க விரும்புபவர் யார்? மனத்தை அடக்க விரும்பி இந்தக் கேள்வியை எழுப்பும் 'நான்' யார்? அதனை அறிந்தால் எல்லாப் பிரச்சினையும் தீர்ந்துவிடும்" என்பார். மேலும் "இதற்குக் குறுக்குவழி எதுவும் கிடையாது. செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். சலிக்கும் மனது வெளிவிஷயங்களை நாடித் திரியும்போதெல்லாம் அதனை அகமுகமாக்கி ஆன்மாவில் நிறுத்த வேண்டும். நிரந்தர அப்யாசத்தால் மனதை அடக்கும் சக்தியைப் படிப்படியாக நீ பெற்று, அதனால் இறுதியில் உனக்கு வசப்படும்" என்பார்.

ஆன்ம சாதனை செய்வதற்காகக் குடும்பத்தையும் தொழிலையும் விட்டுத் துறவியாகி காட்டிற்குச் சென்று விடவேண்டுமா என்று பலர் கேட்பர். பகவான்

அளிக்கும் தெளிவான விடை: “துறவு என்பது மனத்தைப் பற்றியது. அது வெளிவிஷயங்களையோ சூழ்நிலையையோ சார்ந்தது அன்று. ஒருவன் தன் ஊரிலிருந்து, குடும்பத்துடன் வாழ்ந்து, தனது தொழிலைச் செய்துகொண்டு இருந்தாலும் மனதில் பற்று இல்லாதவனாக இருக்கலாம். மற்றொருவன் தொழில், குடும்பம், உடைமை ஆகியவற்றை விட்டுவிட்டுக் காட்டில் இருந்தாலும் புறத்தில் விட்டவைகளை மனதில் விடாமல் பற்றிக்கொண்டு இருக்கலாம். நீ காட்டிற்குச் சென்று என்ன பயன்? குடும்பத்தையும் தொழிலையும் விட்டு விடலாம். ஆனால் உன் மனம் உன் கூடவே வருமே! ‘நான் குடும்பஸ்தன்’ என்ற எண்ணத்திற்குப் பதிலாக ‘நான் துறந்தவன்’ என்ற மற்றொரு எண்ணத்தை மேற்கொள்கிறாய். அவ்வளவே! பழைய பற்றுக்களுக்குப் பதிலாக புதிய பற்றுக்கள் வளரும். மனதில் துறந்து, ‘நான் குடும்பஸ்தன்’ ‘நான் துறவி’ என்ற எண்ணங்களை எல்லாம் விட்டுவிட்டு, ‘நான் இருக்கிறேன்’ என்ற உணர்வு மாத்திரமாய் இருக்க வேண்டியதே அவசியம்’ என்கிறார்.

ஜென் ஞானியாகிய சோஸன் பாடுகிறார்.

மூலாதாரத்திற்குத் திரும்புவது
அதன் அர்த்தத்தைக் கண்டு பிடிப்பதாகும்
தோற்றங்களையே தொடர்வது என்பது
அதனை நழுவ விடுவதாகும்
விகசிக்கும் ஞானத்தின் தருணத்தில்
தோற்றத்திற்கும் வெறுமைக்கும் அப்பால் செல்லுக
தோற்றமளிக்கும் மாற்றங்கள்
நம் அறியாமையின் காரணத்தால்
நாம் அதனை உண்மை என்கிறோம்
உண்மையைத் தேடவும் முயலாதே
அபிப்ராயங்களை நிறுத்திக் கொள்
துவைத நிலையில் நின்று விடாதே

*அவ்வாறு பின்தொடர்தலை ஜாக்ரதையோடு தவிர்த்து விடு*
*இதுவும் அதுவும், சரியும் தவறும், இவைகளின்*
*ஒரு சிறு சாயல் இருந்தாலும்*
*மனத்தின் சாரம் குழப்பத்தில் ஆழ்ந்துவிடும்*
*எல்லா துவைதங்களும் ஏகத்திலிருந்து கிளம்பினாலும்*
*இந்த ஒருமைக்கு அது இணைக்கப்பட்டு இருக்காது*
*பாதையில் மனம் குழப்பமுறாமல் நின்றிருக்கும்போது*
*உலகில் தீங்கு செய்யக்கூடிய எதுவுமே இருக்காது*
*தீங்கு செய்யக்கூடிய பொருள் எதுவும் இல்லாதபோது*
*பழைய பாதையில் நிலைத்திருப்பதை*
*அது நிறுத்திக் கொள்கிறது*
*பேதம் காணுகின்ற எண்ணங்கள் எழாதபோது*
*பழைய மனம் நிலைத்திருப்பதில்லை."*
*[நன்றி: ஓஷோ: உண்மையைத் தேட வேண்டியதில்லை]*

*சத்சங்கத்தினால் சார்பு அகலும்; சார்பு அகல*
*சித்தத்தின் சார்பு சிதையும்*

*என்கிறார் பகவான்.*

*சக்திவாய்ந்த சத்சங்கம் எவ்வித எண்ணங்களும் அற்ற சத்குருவுடன் கூடி இருத்தலாம். அவரது சந்நிதியில் இருந்தாலே போதும்; அவரது எண்ணமற்ற, மனமற்ற நிலை நம் மனக்கதவைத் தட்டத் துவங்கும். அதை நாம் நாமாகப் பெற இயலாது. அதற்காக வேண்டுதலோடு எதிர்நோக்கிக் காத்திருக்க வேண்டும்.*

*பகவான் கூறுவது: "எண்ணங்களைக் கவனி".*

*'மாலினி விஜய தந்திரம்' என்ற நூலில் ஞானி கூறுகிறார்:*

*எண்ணங்களைக் கூர்ந்து சாட்சி பாவத்தில் கவனிக்கும்போது எண்ணத்தின் போக்கு நிதானம் அடைகிறது. அப்போது இரண்டு எண்ணங்களுக்கு இடையே இடைவெளி ஏற்படுகிறது. அந்த இடைவெளியில்தான் தன்னறிவு எனப்படும் சுத்த*

மௌனம் உள்ளது (இரு மேகங்களுக்கு இடையில் உள்ள இடைவெளியில் நீலவானம் தெரிவதுபோல). அந்த இடைவெளியையே நோக்குக.

மனத்தின் பிரச்சினை என்னவெனில் அது நாம ரூபங்களையே நோக்கிப் பழகிக்கொண்டு இருப்பது தான். ஒரு பெரிய வெண்பலகையை நம் முன்வைத்து அதில் நடுவில் ஒரு கரும்புள்ளியை வைத்தோமானால், பெரும்பாலோர் 'என்ன பார்க்கிறாய்?' என்று கேட்கும்போது, கரும்புள்ளி, என்றுதான் சொல்வார்களே தவிர, வெண்பலகை என்று சொல்ல மாட்டார்கள். அவ்வளவு பெரிய வெண்பலகை தெரியாமல் ஒரு சிறிய கரும்புள்ளி மட்டும் தெரிவதற்குக் காரணம் என்ன? அதுவே மனதின் இயல்பு. பின்புலத்தை விட்டு, உருவத்தை நோக்குவது; நாமத்தில் கருத்தினைச் செலுத்துவது. இந்த இயல்பை மாற்றி, நாமரூபத்திற்கு கவனம் கொடுப்பதைக் குறைத்துக்கொண்டே வந்தால், பேருண்மையை நெருங்குவோம். இதை இடைவிடாது பழக்கப் படுத்தலே தியானம். மேகத்திலிருந்து நீல வானத்திற்கு உன் கவனிப்பை மாற்றிக்கொள்ள பழக்கப்படுத்திக் கொள்.

கிருஷ்ணமூர்த்தி கூறுகிறார்: "ஆழ்ந்த தியானத்தில் நோக்குபவனே நோக்கப்படும் பொருள் ஆகிறான்." அதன் பொருள் என்னவெனில், ஆழ்ந்த தியானத்தில், மனம் கரைந்து விடுகிறது. அப்போது நம்மை மலரை விட்டுப் பிரிக்கும் வரம்பு இருப்பதில்லை. மலரும், நாமும் ஒன்றாக ஒன்றி விடுகிறோம்.

வேதாந்த மற்றும் பரபக்தி நூல்களைப் பயிலும் போதும் உயர்ந்த ஞானியர் அதன் கருப்பொருளுடன் ஒன்றாகின்றனர். பகவான் வாழ்விலும் நெகிழவைக்கும் இத்தகு நிகழ்ச்சிகள் நடைபெற்றதுண்டு. ஒருமுறை பகவான் தாயுமானவர் பாடல்களில் இருந்து 'ஆகார புவனம் – சிதம்பர ரகசியம்' என்ற பகுதியைப் படித்து விளக்கிக்கொண்டு இருந்தார்.

24ஆம் பாடலாகிய

பார்ஆதி விண்ணனைத்தும் நீயாச் சிந்தை
பரியமட லாய்எழுதிப் பார்த்துப் பார்த்து
வாராயோ என்ப்ராண நாதா என்பேன்
வளைத்துவளைத்து எனைநீயா வைத்துக் கொண்டு
பூராய மாமேல்ஒன்று அறியா வண்ணம்
புண்ணாளர் போல்நெஞ்சம் புலம்பி உள்ளே
நீராள மாய்உருகிக் கண்ணீர் சோர
நெட்டுயிர்த்து மெய்ம்மறந்து ஓர்நிலையாய் நிற்பேன்.

என்னும் பாடலைப் படிக்கும்போது, அந்தப் பாடல் வெளிப்படுத்தும் பரபக்தி நிலையில் பகவான் உள்ளமும் கரைந்தது. கண்ணீர் அருவியாய்ப் பெருகிறது. தொண்டை அடைத்து, குரல் தழுதழுத்தது. தொடர்ந்து படிக்க இயலாமல், புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, தன்னில் தானே ஆழ்ந்தார் பகவான். இதுவே நாரத பக்தி சூத்ரத்தில் நாரதர் கூறும் பக்தியின் மேம்பட்ட நிலை “ஸ்தப$^{3}$தோ$^{4}$ ப$^{4}$வதி; ஆத்மாராமோ ப$^{4}$வதி” எனும் இறுதிநிலை. (தாயுமானவரின் இந்தப் பாடலின் பொருள்: “இந்த அகிலம் முழுதிலும் உன்னையே கண்டு, இந்த விஸ்வத்தையே பெரிய ஏடாக வைத்துக்கொண்டு உன் திருஉருவத்தை அதில் முற்றும் எழுதிப் பார்த்துக்கொண்டே இருந்து, ‘என் ப்ராண நாத! என்னிடம் வாராயோ!’ என்று உருகி நிற்பேன். உன் பெருங்காதல் என்னை வளைத்துக் கொள்கிறது (நானே நீயாய் ஆனேன்). முற்றிலும் நான் உன்னில் கரைந்து, உலகில் வேறு எதையுமே அறியாமல், நோயாளிகள் போல் உன் பெருங்காதலில் நைந்து, நைந்து, இடைவிடாமல் புலம்பி, என் நெஞ்சமே நீர்ப் பண்டமாய் உருக, நெட்டுயர்ந்து, மெய்ம்மறந்து என்னையே முற்றிலும் மறந்து நிலையாய் நின்று விடுகிறேன்.”

பகவான் எல்லாவற்றிலும் எல்லாரிடத்திலும் (positive) உறுதியான நேர்முகப் பொருளையே காண்பார். அவரிடம் எதிர்மறைக்கு இடமே இல்லை.



ஒருமுறை திருப்போரூர் சந்நிதிமுறைப் பாடலை அன்பர், பகவான் எதிரில் பாடினார்.

**இல்லறத்தான் அல்லேன் இயற்கைத் துறவிஅல்லேன்**
**நல்லறுத்து ஞானியல்லேன்; நாயினேன் - சொல்அறத்தின்**
**ஒன்றேனும் இல்லேன்; உயர்ந்ததிருப் போரூரா!**
**என்றேநான் ஈடேறு வேன்.**

என்ற பாடலைக் கூறும்போது, "எந்தவிதமான ஒழுங்கும், நடைமுறையும் இல்லாத நான் என்றுதான் ஈடேறுவேன்?" என்று அடியார் முறையிடுவதாக அந்த அன்பர் கூறினார். இப்பாடலின் இறுதி அடியான "என்றே நான் ஈடேறுவேன்?" என்பதை, எதிர்மறையாய்ப் பொருள்கொண்டு, "என்றுதான் நான் உய்யமுடியும்?" என்று வருந்துவதாகப் பொருள் கூறினார். உடனே பகவான், "அப்படி இல்லை! 'உயர்ந்த திருப்போரூரா! என்றே நான் ஈடேறுவேன்'" என்று என்வயப்படுத்தி "உயர்ந்த திருப்போரூரா!, என்று உன் திருநாமத்தைக் கூறியே நான் ஈடேறிவிடுவேன்" என்று நேர்முகப் பொருள் தந்தார்.

உரையாடலை மீண்டும் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# இறங்கி, வண்டி மாற வேண்டும்

**பிர. கிரிதர ஜெகதீஷ்**

நான் என் தகப்பனாரைத் தேடிக்கொண்டு அவருடைய உத்தரவின்படி இவ்விடத்தை விட்டுக் கிளம்பி விட்டேன். இது நல்ல காரியத்தில்தான் பிரவேசித்திருக்கிறது. ஆகையால் இந்தக் காரியத்திற்கு ஒருவரும் விசனப்பட வேண்டாம். இதைப் பார்ப்பதற்காக பணமும் செலவு செய்ய வேண்டாம் என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு மதுரையிலிருந்து திருவண்ணாமலையை நோக்கி ஞான வேட்கையுடன் புறப்பட்ட வேங்கடராமன் தம்முடைய ரயில் பயணத்தின் நடுவில் இஸ்லாமிய பெரியவர் ஒருவரைச் சந்திக்க நேரிட்டது.

பெரியவர்: சுவாமி! எங்கே செல்வது?

வேங்கடராமன்: திருவண்ணாமலை.

பெரியவர்: நானும் அங்கேதான் செல்கிறேன்.

வேங்கடராமன்: என்ன! திருவண்ணாமலைக்கா?

பெரியவர்: இல்லை. அதற்கு முந்தைய இடத்திற்கு.

வேங்கடராமன்: அது எது?

பெரியவர்: திருக்கோவிலூர்.

வேங்கடராமன்: அப்படியானால் ரயில் திருவண்ணா மலைக்குப் போகிறதா?

பெரியவர்: நீர் எந்த ஊருக்குச் சீட்டு வாங்கினீர்?

வேங்கடராமன்: திண்டிவனம்.

பெரியவர்: சுவாமி! நீர் திண்டிவனம் செல்லவே வேண்டாம். விழுப்புரத்தில் இறங்கி திருவண்ணாமலைக்கு வண்டி மாற வேண்டும்.

இறங்கி வண்டி மாற வேண்டும்!

இதுவும் இறைவனின் உத்தரவே. மேற்கண்ட வரியின் மூலமாகக் காட்சிகள் மாறுகின்றன. வேங்கடராமன் என்னும் பாலரிஷியை பகவான் ரமணர் என்னும் மகரிஷியாக, ஞானச் சுடர் ஒளி ஆதவனாய் பிரகாசப்படுத்தி, அகில ஜனங்களையும் அப்பிரகாசத்தில் மூழ்கடிக்கச் செய்து ஆனந்த வாழ்வளித்த அற்புத மாற்றமானது அந்த இடத்தில் நிகழ்ந்தது என்று கூறலாம்.

ஆன்மிக வாழ்க்கை என்பதும்கூட ஒரு நீண்ட பயணம் தான்! அப்பயணத்தில் ஆத்ம சாதகன் இடையிடையே இறங்கி வண்டி மாற வேண்டியிருக்கிறது. ஆத்ம சாதனம் என்பது சீராக நிகழ்கிற தொடர் பயணம் அல்ல. காரணம் மனப் பரிபாகம் என்பது ஏற்ற இறக்கங்களோடு கூடியது. ஆகவே அதற்கேற்ப பயணம் மாறுபடும். நடுநடுவே இறங்கி வண்டி மாற வேண்டும்.

லக்ஷியார்த்தத்திலிருந்து வாச்சியார்த்தம், பிறகு வாச்சியார்த்தத்திலிருந்து லக்ஷியார்த்தம் எனத் தொடர்ந்து சாதகன் வண்டியை மாற்றியமைத்துப் பயணிக்க வேண்டியுள்ளது.

ஒரு சொல்லுக்குரிய நேரிடையான பொருளை வாச்சியார்த்தம் என்று கூறுகிறோம். திருவண்ணா மலைக்குப் போ என்று கூறினால் என்ன பொருள்? நாம் திருவண்ணாமலைக்குப் புறப்பட்டுப் போக வேண்டும். இங்கே சொல்லுக்குரிய பொருள் நேரிடையாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதற்கு வாச்சியார்த்தம் என்று பெயர். பிறகு ஒருவர் நம்மிடம் திருவண்ணாமலை எப்பொழுது வந்தது என்று கேட்கிறார். இங்கே சொற்களுக்குரிய நேரிடையான பொருளை எடுத்துக் கொள்ள முடியாது. ஆகவே வாச்சியார்த்தத்தை விட்டுவிட்டு அதற்குரிய மறைமுகமான பொருளைக்

கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. திருவண்ணாமலையி லிருந்து வந்த நபரைக் குறித்து இக்கேள்வியானது கேட்கப் பட்டிருக்கிறது என்று நாம் புரிந்து கொள்கிறோம். காரணம் திருவண்ணாமலை என்பது போக்கும் வரவும் அற்றது. திருவண்ணாமலையிலிருந்து அந்த அன்பர் எப்பொழுது வந்தார் என்ற மறைமுகமாக, உள்ளர்த்தமாகப் புரிந்து கொள்வதை சாஸ்திரம் லக்ஷியார்த்தம் என்று கூறுகிறது.

பல நேரங்களில் குரு ரமண உபதேசமானது நேரிடையாகச் செய்யப்படுகிறது. இன்னும் பல நேரங்களில் நீண்ட, நெடிய மௌனமே உபதேசமாகத் தொடர்வதைக் காண முடிகிறது.

இது என்ன புதிர்! சிந்திக்க வேண்டும்.

ரமணாச்ரம ஓல்டு ஹால் தியான அறையின் வாசலில் பழுத்த பாதாம் மரத்து இலைகள் தாமாகக் கீழே விழுந்து கிடப்பதைப் பார்க்கலாம்.

பகவானின் பதிலளிப்புகள்கூட அதைப் போன்றதுதான்!

நாம் கேட்காமலேயே லக்ஷியார்த்தமாக பகவான் ரமணருடைய பதிலளிப்புகள் நம்முடைய இதயத்தில் வந்து விழுகின்றன.

ஆனால் பெரும்பாலும் குருமொழி மௌனமாய் இருப்பதற்குரிய காரணம் என்ன? காரணம், இறங்கி வண்டி மாற வேண்டும். வாச்சியார்த்தத்திலிருந்து லக்ஷியார்த்தத்திற்கும், லக்ஷியார்த்தத்திலிருந்து வாச்சி யார்த்தத்திற்கும் இறங்கி வண்டி மாற வேண்டும். குருவின் மௌனம் இதைத்தான் உணர்த்துகிறது.

ஈசாவாஸ்ய உபநிஷத்தை பிரமாணமாகக் கொண்டு இக்கருத்தை நம்மால் நன்கு தெளிவு படுத்திக் கொள்ள முடியும்.

அதில் வருகின்ற பிரசித்தி பெற்ற மந்திரம்:

**பூர்ணமத$^{3}$: பூர்ணமித$^{3}$ம் பூர்ணாத் பூர்ணமுத$^{3}$ச்யதே!**
**பூர்ணஸ்ய பூர்ணமாதா$^{3}$ய பூர்ணமேவா வஶிஷ்யதே!!**

மந்திரத்தின் முதல் வரியின் பொருளைப் பார்ப்போம்

அத$^{3}$: = அது (அந்த பரமாத்மா)

பூர்ணம் = பூர்ணமானது (முழுமையானது)

இத$^{3}$: = இது (இந்த ஜீவாத்மா)

பூர்ணம் = பூர்ணமானது (முழுமையானது)

அதாவது பரமாத்மா பூர்ணமானவர்; ஜீவாத்மாவும் பூர்ணமானவன் என்று உபநிஷத் கூறுகிறது. இதை அப்படியே வாச்சியார்த்தமாகப் பொருள்படுத்தினால் இரண்டு பூர்ணங்கள் இருப்பதாக அர்த்தம் வந்துவிடும். பூர்ணம் என்றாலே ஒன்றுதான். அப்படியில்லாமல் இரண்டு பூர்ணங்கள் இருப்பதாக இருந்தால் அவையிரண்டும் ஒன்றையொன்று வரையறுத்துவிடும். அப்படி வரையறைக்கப் பட்டதை பூர்ணம் என்று சொல்ல முடியாது. பூர்ணம் என்றாலே இரண்டற்றது. ஆகவே இந்த இடத்தில் பரமாத்மாவும் பூர்ணம், ஜீவாத்மாவும் பூர்ணம் என்பதை லக்ஷியார்த்தமாக அல்லாமல் அதுவே பரமாத்மாவாகவும், ஜீவாத்மாவாகவும் தோன்றிக் கொண்டிருக்கிறது என்பதுதான் இதனுடைய லக்ஷியார்த்தம்.

ரமண பக்தரான டாக்டர் மசாலாவாலா என்பவர் பகவான் ரமணரிடம் தன்னுடைய நண்பனின் கடிதத்தைக் கொடுத்தார். அக்கடிதத்தில் நீ என்னைப் பூரணன் என்று அழைக்கிறாய். இவ்வுலகில் யார் பூரணன் இல்லை? என்ற கருத்து எழுதப்பட்டிருந்தது. இதைப் படித்ததும் பகவான் ரமணர் புன்முறுவலுடன் கீழ்க்கண்டவாறு கூறினார்:

"நாம் நம்மை உபாதி என்ற எல்லைக்கு உட்படுத்திக் கொள்கிறோம். இந்நிலையில், என்றும் இருக்கும் எல்லையற்றவராக ஆக விரும்புகிறோம். நாம் எல்லைக்கு உட்பட்டவர் என்ற எண்ணத்தை விட்டு விடவே அனைத்து முயற்சிகளும் தேவைப்படுகின்றன. உபாதியினிடத்தில் கவனம் குவிந்து கிடப்பதால் பூர்ண ஸ்வரூபத்தை நாம் மறந்திருக்கிறோம். உதாரணமாக தட்டச்சு செய்யப்பட்ட இந்தக் கடிதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். உலகத்தை மட்டும் பார்த்து பூர்ணமான ஆத்மாவைப் பார்க்கவில்லை என்று கூறுவது எதைப் போலிருக்கிறது என்றால் எழுத்துக்களைப் பார்க்கிறேன்; ஆனால் காகிதத்தை மட்டும் என்னால் பார்க்க முடியவில்லை என்று கூறுவதுபோல் இருக்கிறது. காகிதம் இருப்பதால்தான் எழுத்துக்கள் இருப்பது சாத்தியமாகிறது. ஆக, இந்த இடத்தில் கூறுவது என்னவென்றால்:

"உபாதியை விட்டு இறங்கி ஸ்வரூபத்திற்கு வண்டி மாற வேண்டும்."

மேற்கொண்டு மந்திரத்தைப் பார்ப்போம்:

பூர்ணாத் = பூர்ணமான பரமாத்மாவிடமிருந்து

பூர்ணம் = பூர்ணமான ஜீவாத்மா

உத³ச்யதே = தோன்றியிருக்கிறது.

இங்கே ஒரு பிரச்சனை எழுகிறது. அது என்ன வென்றால், பரமாத்மா பூர்ணம். ஜீவாத்மா பூர்ணம். வரையறையற்ற ஒன்றிலிருந்து வரையறையற்ற மற்றொன்று தோன்றியது என்பது எப்படி சாத்தியமாகும்? ஆகவே இந்த இடத்தில் லக்ஷியார்த்த திருஷ்டியிலிருந்து வாச்சியார்த்த திருஷ்டிக்கு பயணத்தை மாற்ற வேண்டியுள்ளது. ஸோபாதிகமான, அதாவது உபாதியுடன்கூடிய பரமாத்மா மற்றும் ஜீவாத்மாக்களை இங்கே கணக்கில் எடுத்துக்கொள்ள

வேண்டும். ஜீவாத்மாவாகிய நமக்கு இந்த உடல் உபாதியாக இருப்பதைப்போல பரமாத்மாகிய ஈச்வரனுக்கு இந்த அருணாசலமே உபாதியாக இருக்கிறது என்று பகவான் ரமணர் கூறுகிறார். ஆக, **“ஸோபாதிக பரமாத்மன: ஸோபாதிக ஜீவாத்மா உத³ச்யதே!”**

“பிரபஞ்ச உபாதியுடன் கூடிய பரமாத்மாவிடமிருந்து உடல் உபாதியுடன் கூடிய ஜீவாத்மா தோன்றியுள்ளான் என்பது இதனுடைய வாச்சியார்த்தம்.”

பிரபஞ்சம் மற்றும் உடல் என்ற உபாதிகளின் அடிப்படையில் பரமாத்மா என்பவர் படைப்பவர். ஜீவாத்மாக்களாகிய நாம் அனைவரும் படைக்கப் பட்டவர்கள்.

பகவான் ரமணரிடம் ஒரு அன்பர்: ‘சுவாமி! கடவுள் தன்னிடம் பக்தியுள்ள பக்தர்களை கைவிடமாட்டார் என்று ஞானேச்வர் மஹராஜ் கூறுகிறாரே’ என்று கேட்டார்.

அதற்கு பகவான், “ஆமாம். ராமபிரான் தன் பக்தர்களை ஒருபோதும் கைவிடமாட்டார் என்று ராமதாஸர் எழுதியுள்ளார். ஆகவே நான் அத்வைதத்தை மட்டும் போதிக்கவில்லை. கேட்பவரின் சக்திக்குத் தக்கபடி ஒரே உண்மையை வெவ்வேறு விதமாக வெளியிட வேண்டியிருக்கிறது. பிறப்பு, இறப்பு, நீட்டல், சுருக்கல், சாதகன், முமுக்ஷு, பந்தம், மோக்ஷம் என்றெல்லாம் ஒன்றுமில்லை. ஒன்றே ஒன்று மட்டுந்தான் இருக்கிறது. இந்த உண்மையை ஆரம்ப நிலையில் பெரும்பாலானவர்களால் ஜீரணிக்க முடிவதில்லை. ஆகவே இத்தனை படிகளும் தேவைப் படுகின்றன” என்று கூறினார்.

இனி, மந்திரத்தினுடைய இரண்டாவது வரியைப் பார்ப்போம்:

பூர்ணஸ்ய = ஸோபாதிக அதாவது உபாதியுடன் கூடிய பரமாத்மா மற்றும் ஜீவாத்மாக்கள் இவர்களிடமுள்ள,

பூர்ணம் ஆதா³ய = சைதன்ய அம்சத்தை எடுத்துவிட்டால்

பூர்ணம் ஏவ = பூர்ணம் மட்டுமே (சைதன்யம் மட்டுமே)

அவஶிஷ்யதே = எஞ்சியிருக்கிறது.

உபாதி+சைதன்யம் – இந்த இரண்டிலிருந்து சைதன்யத்தை அதாவது பூர்ணத்தை எடுத்துவிட்டால் மீதமிருப்பது உபாதி என்றுதான் நியாயமாகக் கூற வேண்டும். ஆனால் சாஸ்திரம் அப்படிக் கூறுவதற்குப் பதிலாக பூர்ணம் (சைதன்யம்) மட்டுமே எஞ்சியிருக்கிறது என்று கூறுகிறது. ஆக, இந்த இடத்தில் மீண்டும் நாம் வாச்சியார்த்தத்திலிருந்து லக்ஷியார்த்தத்திற்கு வண்டி மாறி ஏற வேண்டும். ஏனென்றால் உபாதிக்கு ஸ்வதந்திரமாக தனித்து நிற்கும் சக்தியில்லை. காரணம், அது மித்யா. அதாவது உபாதி என்பது வெறும் தோற்றம். பூர்ணம் மட்டுமே இருக்கிறது என்று உபநிஷத் கூறுவதனுடைய லக்ஷியார்த்தம் என்னவென்றால்:

அபூர்ணமான உடல், மன, உலக அனுபவங்கள் மித்யா, வெறும் தோற்றம், பொய் என்பதே.

பகவான் ரமணர் கூறுகிறார்:

“திருஷ்டி சிருஷ்டி, சிருஷ்டி திருஷ்டி என்ற இரண்டு வாதங்கள் இருக்கின்றன. ‘நீ பார்ப்பதால்தான் உலகம் இருக்கிறது’ என்பது திருஷ்டி சிருஷ்டி வாதம். நீ பார்ப்பதெல்லாம் பார்ப்பவனாகிய உன்னைத் சார்ந்தவைகள். காண்பவனாகிய உன்னைவிட்டு காட்சி என்பது எதுவும் இல்லை. கனவில் பார்ப்பது அனைத்தும் உன் மனோமயக் காட்சிதானே! இப்படிக்

கூறும்பொழுது இதைச் சரியாகக் கிரஹிக்க முடியாமல் கனவு என்பது சிறிதுநேரம் மட்டுமே இருக்கிறது. ஆனால் உலகமோ எப்பொழுதும் இருக்கிறது என்று கூறுபவர்களிடம் உலகுக்கு இருப்பு இல்லை என்று கூற முடியாது. அவர்களிடம் சிருஷ்டி திருஷ்டி வாதத்தைத்தான் கூற வேண்டும். அதாவது கடவுள் உலகத்தைப் படைத்தார். ஆகவே நீ உலகத்தைக் காண்கிறாய் என்று கூற வேண்டியுள்ளது. இந்த சாரார்க்கு இது மட்டுமே திருப்தியளிக்கும். பிறகு பரிபாகம் ஏற்பட ஏற்பட இவை அனைத்தும் உண்மையாக இருக்க முடியாது. பரிபூர்ணம் என்பது ஒன்றாகத்தானே இருக்க முடியும் என்று ஞானம் வரும்."

குரு உபதேசம் என்பது நீண்டதொரு பயணத்தைப் போன்றது. ரமணகுரு நம்முடைய பயணத்தை வழிநடத்துகிறார். சில நேரங்களில் வண்டி மாறி ஏறும்படி அறிவுறுத்தப்படுகிறது. சில நேரங்களில் பயணத்தை அதே வண்டியில் தொடரும்படி கட்டளையிடப் படுகிறது. ஏன் எதற்கு என்ற ஐயங்களுக்குரிய பதிலை பகவான் ரமணர் மட்டுமே அறிவார். பயணத்தின் முடிவில் அதற்குரிய பதிலை நாமும் அறிந்து கொள்வோம்.


## ரமணோதயம்

Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778

# பகவான் காட்டிய பாதை

## இசைக்கவி ரமணன்

*ஆழ்துயிலில் ஆளே தடுத்தவர் தானேது*
*வாழ்வேது சாவேது சாற்றிடுவீர்! பாழ்நினைப்பால்*
*புண்ணாகிப் போகாமல் பூப்போல வாழ்வதற்கே*
*கண் திறந்து நன்குறங்கக் கல்!*

"யாரும் தரத்தால் கடவுளாகலாம்; அளவால் கடவுளாக முடியாது," என்பார் என் குருநாதர். (Anyone can be qualitatively God; no one can be so qualitatively).

எல்லையற்ற ஞானம், எல்லையற்ற பலம், எல்லையற்ற ஐஸ்வரியம், எல்லையற்ற வீரியம், எல்லையற்ற ஆதாரசக்தி, எல்லையற்ற தேஜஸ். என்னும் ஆறு குணங்கள் அல்லது ஆற்றல்கள் பகவானுக்குச் சொல்லப்படுகின்றன.

ரமணர், பகவான் என்று அழைக்கப்பட்டார். அவர் அதை ஏற்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை. பகவான் என்ற குறியீடலைப் பற்றிப் பேசும்போதெல்லாம் அவர் அதை ஒரு தத்துவமாகத்தான் கையாண்டார். ஒரே நேரத்தில் அவர் பகவானாகவும், மனிதராகவும் இருந்ததில் அவருக்குக் குழப்பமெதுவும் இருக்க வில்லை. நமக்கோ இன்னும் தெளிவு பிறக்கவில்லை.

தான் உடம்பு இல்லை என்பதை அறிந்தவுடனேயே ஒருவன் உள்ளாழ்ந்து விடுகிறான்; உள்ளில் வெளியைக் காண்கிறான்; புலன்களின் வரம்புக்கும், நீட்சிக்கும் அப்பால் அவாவி இருத்தலை உணர்கின்றான்; மண்ணில் விண்ணைக் காண்கிறான்; ஆயினும், மற்ற மனிதர்களைப் போலே தானும் வளைய வருகிறான். உண்ணுகிறான், உறங்குகின்றான், பேசுகின்றான்,

சிரிக்கின்றான். எதையும் அவன் செய்வதில்லை. இவையெல்லாம் அவன் செய்வது போல் நமக்குத் தோன்றுகின்றது.

நோக்கம், உத்தேசம் என்று எதுவும் அவனுக்கில்லை. அதனால் அவன் நம்மைப்போல் தொழிற்படுவதில்லை, செயலின் வசத்தில் அவனில்லை. இங்குதான் அவன் மற்ற மனிதர்களிடமிருந்து அறவே வேறுபடுகிறான்.

இவையெல்லாம், பரம்பொருளாக இருக்கின்ற பகவானின் குணங்களல்ல; பரத்தை இகத்தில் அனுபவிக்கும் மனித பகவானின் நிலை.

பசுவுக்குத் தான் பசு என்று தெரியாது. ஞானிக்கு, தான் ஞானி என்கின்ற அபிப்பிராயம் கிடையாது. பரம்பொருள், தன்னைப் பரம்பொருள் என்று நினைத்துக்கொண்டிருக்காது. நினைப்பற்ற ரமணருக்கும் தான் பகவான் என்பதாக எண்ணம் இருக்க வாய்ப்பில்லை அல்லவா?

பகவான்தான் அனைத்தையும் படைத்தார் என்பது நம் கருத்து. ரமணர் பகவான்தான் என்பதும் நம் கருத்துத்தான். நம்மை நாம் அறிந்துகொள்ளும் போதுதான் இந்தக் கருத்து அனுபவமாகும். ‘பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய்,’ என்று பாரதி பாடுவது போல, பார்வைக்கு எளிய மனிதராய், பழகுவதற்கு இனிய தோழராய், தரத்திலே கடவுளாய், தன்னில் தான் ஒன்றிய தவச்சுடராய் விளங்குபவரே நம் பகவான் ரமணர்.

‘விஸ்வரூபம் என்பது காட்டப்படுவதல்ல, காணப்படுவது,’ என்றார் ஜெயகாந்தன்.

நம்முடைய அறிவுக்கும், நம்முடைய அறியாமைக்கும் பெரிதும் வேற்றுமை இல்லை என்பதால்தான், நம்முடைய அறிவின் மீதும் பச்சாதாபம் காட்டுகின்ற பொறுமை ரமணருக்கு இருந்தது.

பாதைகளின் முடிவாகத்தான் அவர் மலைபோல் சப்பணமிட்டிருந்தார். பயணத்தின் இலக்காகவே அவர் மலையைச் சுற்றிவந்து கொண்டிருந்தார்.

அந்த மலை சிவனென்று புரிந்துகொள்வதும், இந்த ரமணர் உடம்பல்ல என்று தெரிந்துகொள்வதும் ஒன்றே என்பது நாம் உடம்பல்ல என்று தெளியும்போதுதான் சாத்தியமாகிறது.

மலை, தான் சிவனென்று சொல்லிக் கேட்டதில்லை; ரமணர் தன்னை பகவான் என்று சொல்லிக்கொள்ளவுமில்லை. அம்பலத்தில் ரகசியமாக. அப்பட்டமான பின்னும் அகலாத மர்மமாகவே இது தொடர்கிறது.

அனைத்தையும் படைத்த இறைவன், அனைத்தையும் துறந்து ஆதி பிக்ஷுவாய் நடக்கையில் அனைத்தும் அவனைப் பின்தொடர்ந்தன.

அனைத்தும் தானே, அயலாய் எதுவுமில்லை என்று அறிந்தபோது, அனைத்தும் ரமணருக்குள் அடங்கின.

அங்கே சிவன், ரமணரானான்.

இங்கே ரமணர் சிவனானார்.

அங்கே, ஆற்றல் விரிந்தது.

இங்கே, ஆற்றல் ஒடுங்கியது.

படைத்ததை விட்டு விலகிப் பார்க்கும் பக்குவம் பரமனுக்குத் தேவைப்பட்டது.

படைப்பெல்லாம் தானே என்று தன்னுள்ளே பார்க்கும் பரவசம் ரமணருக்கு இயல்பானது.

அங்கே, வெளிப்பாட்டில், விரிவில், ஆற்றல் உணரப் பட்டது.

இங்கே, உள்முனையில், ஒடுக்கத்தில் ஆற்றல் உணரப்பட்டது.

அது, விரிவும் ஒடுக்கமுமாய் விளங்கும் அற்புதம்.

இது ஒடுக்கமும் விரிவுமாய்த் துலங்கும் அதிசயம்.

வரம்புகளின் உச்சமாகவும், வரம்பின்மையை உணரும் ஒரே வாய்ப்பாகவும் அமைந்துள்ள மர்மம் மனிதப் பிறப்பு. இதை உணர்த்தவே, கடவுள் மனிதனாக உலகில் காலார நடக்கிறான். இதை உணர்ந்த மனிதனே, கடவுளாகக் கொண்டாடப்படுகிறான்.

இறங்கி வருதல் அதிசயமல்ல, கருணை; கடமையும் கூட.

ஏறி அமர்தல் எளிதல்ல. சாதனை, பொறுப்பும் கூட.

மனிதனாய்ப் பிறப்பவனும் இறைவனே. இறைவனாய்த் தெரிபவனும் மனிதனே. எனினும், உலகமென்னும் இந்தச் சந்தையில், வினைகளால் அலைக்கழிக்கப்படும் மந்தையின் நடுவில் ஒருவன் இதனை உணர்ந்து, ஓங்கி, ஒன்றுமறியாதவன்போல் அடங்கியும் இருக்கிறான் என்றால் அது இறைவனே வணங்கும் வல்லமை.

ஆக, பகவான் ரமணராக இறங்கி வருதலைக் காட்டிலும், ரமணர் பகவனாக ஏறி அமர்வதே சிறப்பு.

அவ்விதம் அமர்ந்திருக்கும் பகவான் ரமணரை, மனித தெய்வத்தை வியந்து வாழ்த்துகின்றோம்:

எண்திசையும் விரிந்திருக்கும் அண்ட மெல்லாம்
இதயத்து குகைக்குள்ளே சுடரும் தீயின்
நுண்ணரிய முனையினிலே உயிரை வைத்து
நோக்கேஉன் உணர்வாகத் தேக்கிக் கண்டாய்
மண்ணளையும் மழலைமனம்; விண்ணைத் தாண்டும்
மௌனத்தின் தழலிரண்டும் நீயே ஆகி
எண்ணங்கள் கைவணங்கும் ஏகாந்தத்தின்
எழிலார்ந்த அரியணையில் இசைந்து கொண்டாய்!

*உடம்பெங்கும் ஊருக்காய் ஒண்டிக் கொண்டாய்*
*ஊரெங்கும் மிகவியல்பாய் மண்டிக் கொண்டாய்*
*தடம்பதித்தாய்; தடமில்லாத் தடம்சமைத்தாய்*
*தடத்தையதன் முடிவோடு தழுவச்செய்தாய்*
*கடன்கயிறு கழுத்திறுக்கிக் களைத்த வாழ்வில்*
*கத்திரிக்கோல் விசாரணையைக் கையில் தந்தாய்*
*உடன்பட்டார் உன்னொளியில் ஒடுங்கித் தீர்ந்தார்*
*உள்ளத்தை வேரோடு கிள்ளிப் போட்டார்!*

*நீயேதான் பாதையெனில் பயணமேது?*
*நீயிலக்கென் றறிந்தவர்க்குச் சலனமேது?*
*தீயேதான் திசையெனிலோ திரிவதெங்கே?*
*திரைகளைந்த வெளிநீயே! தெளிந்த தேனே!*
*மாயக்கை தாயமாடும் மண்ணில், ஞான*
*மலையாக அமர்ந்தருளும் ரமணா வாழ்க!*
*நேயக்கை எனைக்காக்கும் எனுமுணர்வில்*
*நிம்மதியாய் வாழுகின்றேன் நீடு வாழ்க!*

*நான்யார் என்னும் விசாரணை எப்போது சாத்தியமாகிறது? நான் தேகம் இல்லை என்னும் நிதர்சனமே அந்த விசாரணையின் துவக்கம். அது வாய்க்கும்வரை, அது மற்ற மந்திரங்கள், பூஜைகள், ஆராதனைகள்போல் ஓர் உடல் சார்ந்த மனத்தொழில்தான்.*

*எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் ஆசையன்று. ஆசைக்குக் காரணமான 'நான்'தான். நமக்குப் பகை நாமே; நல்ல துணை நாமே; சுமை நாமே; நாமே சுகம்.*

*'நான்' என்பது ஆளல்ல. எல்லாவற்றையும் ஆளாக்கிவிடும் எண்ணத்தின் மூலம்.*

*'நான்' என்பது அச்சம், அஞ்ஞானம்.*

நம்முடைய சத்தியத்திலிருந்து நம்மை அந்நியப்படுத்துவதே நான். அந்நியமே ‘எனது’.

மனிதனில் ‘நான்’ ஆணவம், அஸ்மிதா. அதன் மறு எல்லையே ப்ரம்ம சாக்ஷாத்காரம்

‘நான்’ அறியாமை. ‘எனது’ பேதைமை.

நானல்ல தேகம் எனதல்ல மரணம், இந்த
ஞானத்தில் நிலையாக நிற்பதே யோகம்
ஊனல்ல நானென் றுணரா துணர்ந்து
ஒன்றிலும் பற்றாமல் நிற்பதே தியாகம்
வானத்தைத் தாங்கிடும் வாய்மைக்கு விதியெது?
வாழ்வாக விரிகின்ற வாய்ப்புக்கு வினையெது?
வானமாய் வையமாய் வளைகின்ற புல்லாய்
வாய்மையாய் வாழ்வாங்கு வாழ்வதே நானே!

இன்று நாம் இருக்கும் நிலையில், நாம் தேகம் இல்லை என்னும் சத்தியம் ஒரு நம்பகமான சேதியாக மட்டுமே இருக்கிறது. இந்த நம்பிக்கை அனுபவமாகும் சாத்தியத்தில் நமக்கு வலுவான நம்பிக்கை இல்லை. எதையெதையோ விட்டுவிட நேரிடும் என்று அஞ்சுகின்றோம்.

எதிரே அமர்ந்திருக்கிறார் பகவான். அவருக்கு நேரெதிரே நின்றுகொண்டிருக்கின்றோம் நாம். ஆனால், நமக்கு அணுக்கம் அனுபவமாகவில்லை. அவருக்கும், நமக்கும் இடையே இருக்கும் குறைக்கவே முடியாதோ என்று தோன்றும் தொலைவு நம்மைச் சுடுகிறது. விலக வழியே இல்லை; நெருங்க வழி தெரியவில்லை. விரலருகே, வெகு தொலைவில் என்னும் இந்த நிலைமை நம் நெஞ்சைப் புரட்டிப் போடுகிறது. இன்றைக்கு நாம் கூடியிருப்பதும் இதனாலே அல்லவா?

பகவான் எதையும் விடச்சொல்லவில்லை. ஒன்றே ஒன்றைப் பற்றிக்கொள்ளச் சொல்கிறார். அது என்ன? நான் தேகம் இல்லை என்னும் சத்தியத்தை. இன்றைக்கு,

*அது நமக்கு நம்பத் தகுந்த சேதியாக மட்டுமே இருந்தாலும் அந்த நம்பிக்கையைப் பற்றிக்கொள்ள வேண்டும். 'கடவுள் நம் தரத்தைச் சோதிப்பதில்லை. ஏனெனில், ஒருவனும் தேறமாட்டான்! நம் நம்பிக்கையைத்தான் அவர் உற்றுக் காண்கிறார். எனவே, உங்கள் நம்பிக்கையின் மீது நம்பிக்கை வையுங்கள்,' என்பார் என் குருநாதர். (*'God does not test our qualities. For, no one would pass such a test*!* He may look at your faith*!* So, have faith in your faith*!')*

*எனவே, நான் யார் நான் யார் என்று கேட்பதைக் காட்டிலும், நான் தேகமில்லை நான் தேகமில்லை என்பதை நினைவுபடுத்திக்கொள்வது நம்மை நான் யார் என்னும் கேள்வியை விசாரணையாக ஆக்கித் தரும். நான் தேகமில்லை என்பது உண்மை; அதில் ஐயம் வேண்டாம். உண்மையை நினைவுபடுத்திக் கொள்வதன் மூலமே அது அனுபவமாகிறது.* 'Truth is realised by assuming it because it is true,' *என்பார் என் குருநாதர்.*

**இடைவிடாமல் கவனிக்க வேண்டும்**

**எந்த முயற்சியும் இல்லாமல், சற்றும் குறுக்கீடில்லாமல் கவனிக்க வேண்டும்**

**தரம் பார்த்து எடை போடக் கூடாது. சும்மா கவனிக்க வேண்டும். Don't create new identities**

*இதனால் என்ன ஆகும்?*

**எண்ணங்களின் வேகம் குறையும்**

**எண்ணங்களின் தொகை குறையும்**

**எண்ணத்திற்கும் எண்ணத்திற்கும் இடைவெளி அதிகரிக்கும்**

**எண்ணங்களின் தரம் பெருகும்**

*எண்ணங்கள் எண்ணுவதற்காகக் காத்திருக்கும்*

*எண்ணங்கள் நின்றுபோகும்*

*புத்தி - மனம் - உடம்பு என்பதற்கும் நாம் என்பதற்கும் ஒரு பிரிவினை ஏற்படும்*

*நம்முடைய நடவடிக்கைகள் எல்லாமே வேடிக்கையாகும்*

*உலகமே ஒரு நகைச்சுவைத் துணுக்காகத் தெரியும்*

*நேர்மையான நடிப்பு கை கூடும்*

*சில நடைமுறைகளைக் கவனித்தால், இந்த நினைவுறுத்துதல் சுவாரசியமாகும்:*

*கையால் எடுத்து உண்கின்றோம். செரிமானம் செய்வது யார்?*

*ஒன்றை நினைக்கவைப்பதும், மறக்கவைப்பதும் எது?*

*ஒரு முனையில் குத்திய முள் அல்லது ஊசியின் வலியுணர்வு, உடம்பெங்கும் தெரிவது எதனால்?*

*உறக்கத்தில் ஏன் ஒன்றுமே தெரிவதில்லை? உயிரோடிருப்பது, உடம்பு இருப்பது, உலகம் இருப்பது, உறவுகள் இருப்பது ஒன்றுமே தெரியவில்லையே! உறங்கினோம் என்பதே விழித்தால்தானே தெரிகிறது? ஒன்றுமே தெரியாத ஒரு நிலைமை, அதாவது உணர்வில்லாத அனுபவம் எப்படிப் பிற்பாடு தெரிகிறது? அப்படியானால், ஏதோ ஒன்று இந்த உடம்பும், மனமும் உறங்கியதையும் பார்த்துக்கொண்டிருந்தது, பதிவு செய்திருக்கிறது என்பதால்தானே! அந்த ஒன்றுதான் நாம் என்று புரிகிறதே! எனில் நாம் தேகமில்லை என்பது தெரிகிறதே! அப்போது நாம் நான் யார் என்னும் விசாரணையை நெருங்கிவிட்டோம் என்றாகிறதே!*

*உறக்கம் என்பது விழிப்பில்தானே*
*உணரப் படுகிறது!*
*உலகும் உடலும் மனமும் துயிலில்*
*ஒடுங்கிப் போகிறது*
*உறக்கம் விழிப்பின் இடையே நிலவும்*
*கிறக்கத் தில்நின்றால்*
*உறங்குவ தாரதை யுணர்வது யாரெனும்*
*உண்மை புரிகிறது!*
*ஒவ்வொரு முறையும் உறங்கும் தருணம்*
*உண்மையில் நுழைகின்றோம்*
*உணர்ந்த படியே உறங்கப் போனால்*
*உண்மையை அறிகின்றோம்*
*கவ்விய புலிவாய் போன்றதே குருவின்*
*கருணையும் விசாரணையும்! நம்*
*கலிதீர்க் காமல் புலிவில காது!*
*கட்டாயம் பிழைத்தோம்!*
*நம்முடைய பிரச்சினை என்ன?*

நமக்கு எதிலும் முழுமையாக விருப்பமில்லை. ஆம்! நமக்கு விருப்பமானவற்றிலும், நமக்கு முழுமையாக விருப்பமில்லை - அது பொருளானாலும், உறவானாலும், கருத்தானாலும் சரி! இதனால்தான் எதையும் நாம் மீண்டும் மீண்டும் நாடிச் சோர்கிறோம்.

நமக்கு எதிலும் முழுமையான வெறுப்புமில்லை; அப்படியொரு வெறுப்பு நமக்குத் தேவையில்லை; அது உகந்ததுமில்லை.

நமக்கு நம்மைத் தெரியவில்லை. எனவே எதையோ வெளியே நாடுகிறோம். அதில் எதையோ தேடுகிறோம். ஓயாமல் தேர்ந்தெடுக்கவும் முயல்கிறோம். இதனால்தான் நாம் சோர்கிறோம், சலிப்படைகிறோம்.

கொஞ்சம் கடமை, கொஞ்சம் கடவுள் என்று தடுமாறுகின்றோம். கடமை சலிக்கும்போது கடவுளையும், கடவுள் புரியாத போது, அல்லது கடவுள்

நம்முடைய ஆசைகளை அபகரித்துவிடுவான் என்ற அச்சம் வரும்போது கடமையையும் விரும்புகின்றோம்! கொஞ்சம் நம்பிக்கை, கொஞ்சம் ஐயம் என்று குழம்பிப் போகின்றோம். 'தன்னை வெல்ல நினைக்கும் எந்த முயற்சியையும் மனம் எப்படியாவது முறியடிக்கவே முயலும்,' என்பார் பகவான்.

அது, படிப்பதற்காக எழுந்திருக்க வேண்டும் என்பதற்காக அலாரம் வைத்த மாணவன், அது அடிக்கும்போது அதை அடித்துப்போட்டுவிட்டு, மீண்டும் அடித்துப்போட்ட மாதிரித் தூங்கும் அவன், எழுந்திருக்கத் தேவையில்லை என்பதற்காக மனம் பட்டியலிட்ட காரணங்களைப் போல!!

எதிலும் நமக்குத் தீவிரமான ஆர்வம் இல்லை; முழுமையான வேட்கை இல்லை. 'பெரிதினும் பெரிது கேள்' என்பாள் பாட்டி, மிகப்பெரிய ஒன்றில் ஆர்வம் எப்படி வருகிறது? சத்திய தரிசனத்தில் வேட்கை எப்படி வருகிறது?

எந்தச் செயலைச் செய்தாலும் அதை சிரத்தையோடு, நேர்த்தியாகச் செய்வதன் மூலம்தான்!

'ஒரு மகாத்மாவை, அவர் சின்னச் சின்னச் செயல்களில் காட்டும் அக்கறை மூலம் அறிந்துகொள்ளுங்கள்!' என்பார் விவேகானந்தர்.

சிலர், எதையும் சிறிய செயல் என்று அக்கறையின்றி ஒதுக்கவில்லை. அதுதான் அப்போது செய்யவேண்டியது என்ற கருத்தில், அதைச் செவ்வனே செய்தார்கள். அதனால்தான், அவர்களுக்கு எந்த அரிய செயலும் பெரிய செயலாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட மனிதர்களையே நாம் மகான்கள் என்று கொண்டாடுகின்றோம்.

ரமணர்..

காய்களை நறுக்கியதில் ஒரு geometrical precision இருந்தது

மாவரைத்ததில் ஒரு மௌனியின் முனைப்பு இருந்தது

அடுப்பில் வெந்துகொண்டிருந்தது கையில் தெறித்துக் கொப்புளம் கிளம்புவதை அறியாமல், கரண்டியால் கிண்டிக்கொண்டிருந்ததில், ஒருமுகச் சிந்தனை தெரிந்தது

ஆய்ந்த கீரைகளின் வேர்களை வீணாக்காமல், அவற்றை இடித்துச் சாறெடுத்து ரசத்துடன் சேர்க்க வேண்டும் என்றதில் சிக்கனமும் பக்குவமும் மிளிர்ந்தன

உதவியாளர்கள் சோம்பலின் காரணமாக அந்தக் கீரை ஆய்வுகளை அவருக்குத் தெரியாமல் மண்ணில் புதைத்துவிட்டதை அறிந்தபின், அது பற்றி அவர்களிடம் மீண்டும் சொல்லாதது, அவருடைய மாண்பையும், மனிதன் தன்னைத் தானேதான் திருத்திக்கொள்ள வேண்டும் என்ற போதனையையும் காட்டியது

எந்தப் பொருளையும் வீணாக்கக் கூடாது என்பது அவர் காகிதங்களைக் கத்தரித்துப் பயன்பாட்டில் வைத்துக்கொண்டதில் தெரிந்தது

காக்கை, குருவி, பசு, அணில், நாய், மயில், குரங்கு போன்ற உயிரினங்களோடு மிக நெருக்கமாக உறவாடி, 'அவர்களுடைய இடத்திலல்லவா நாம் இருக்கிறோம்' என்று பிராணி மித்திரராக இருந்து மற்றவர்களுக்கு நினைவு படுத்தியதில், எல்லா உயிரும் ஒன்றே என்பது வறட்டுத் தத்துவமாக இல்லாமல் அவருக்கு அன்றாட வாழ்க்கையின் இயல்பான அம்சமாய் இருந்தது

அரைப்பானைக் கஞ்சியில் மோரூற்றி நீரூற்றி, சுக்குப் பொடியைச் சேர்த்து நான்கு பேர்களின் ஆகாரத்தைப் பத்துப் பேர்களுக்காகப் பெருக்கியதில் அவருடைய விருந்தோம்பல் பளிச்சிட்டது

கீழே உட்கார்ந்து பழக்கமில்லாத வெள்ளைக்காரரை, தாராளமாகக் காலை நீட்டிக்கொண்டு உட்காரச் சொன்னதும், கடும்வெய்யிலுக்குப் பழக்கப்படாத அவர்களுக்கு சர்க்கரை சேர்த்த எலுமிச்சைச் சாறு இன்னும் இன்னும் என்று வழங்கச் சொன்னதும், தூக்கிப் பருகத் தெரியாத அவர்களை எச்சில் பண்ணிக் குடிக்கலாம் என்று சொன்னதும் அவருடைய அன்பான உபசரிப்பைப் பறைசாற்றியது

கூட்டம் கூடத் துவங்கிய பிறகு அருகில் அண்ட விடாததால் ஓரத்தில் நின்றிருந்த பூவன் என்னும் இடையரை அருகே அழைத்து, 'நான் தனியே இருந்தபோது, வியாபாரத்திற்காக வைத்திருந்த பாலை எனக்காக எடுத்துக்கொண்டுவந்து கொடுத்தது இவன்தானே' என்றதிலும்; தாசி ரத்னம்மாள் கல்லாய் உட்கார்ந்திருந்த தனது வாயை வலுக்கட்டாயமாகத் திறந்து பிசைந்த சோற்றைத் திணித்தது, அது மறுநாளும் உண்ணப்படாமல் இருப்பதைக் கண்டு அதை அகற்றி வாயைச் சுத்தம் செய்து மீண்டும் சோறூட்டினாள் என்றதிலும்; இன்னும் எத்தனையோ நிகழ்ச்சிகளிலும் அவர் ஏழைகளின் மீது வைத்திருந்த கருணையும், அன்பும் மேலோங்கி நின்றன

தனக்கொரு நீதி, பிறர்க்கொரு நீதி. தனக்கு ஒரு பிரத்யேக வசதி என்பதை ஒரு போதும் ஏற்க மறுத்த மாட்சிமை

மாதவிடாய் காரணமாக சூரி நாகம்மாள் வராமல் இருந்தபோது, 'ஓஹோ வேலை செய்யாமல் இருப்பதற்கு இது சௌகரியம் இவாளுக்கு' என்று அம்மையாரைப் பார்க்கவில்லை என்றபோது இதைக் காட்டிலும் பெண்மையைப் புரிந்துகொண்ட தந்தையைப் பார்க்கமுடியாது என்றே தோன்றியது.

இவை போன்ற எத்தனையோ நிகழ்ச்சிகளைச் சொல்லலாம். இவை ஒவ்வொன்றிலும் அவர் காட்டிய நேர்மை, நேர்த்தி, சிரத்தை இவைதான் நமக்கு அவர் காட்டியிருக்கின்ற பாதை என்று நான் கருதுகின்றேன்.

'செய்கையில் நேர்த்தியே யோகம்'; என்று கீதையை மொழிபெயர்ப்பான் பாரதி. 'முன்பு நிற்கின்ற தொழிலே சக்தி' என்று சுட்டிக்காட்டியவனும் அவனே. "மூன்று உலகங்களிலிருந்தும் எவரிடத்திலிருந்தும் எதுவும் நான் பெற வேண்டியதில்லை. ஆயினும், விதிக்கப்பட்ட, ஏற்றுக்கொண்ட தொழிலை நான் செவ்வனே செய்கிறேன். நான் சும்மா இருந்தால் மனிதர்களை அழிவுப் பாதையில் இட்டுச் சென்ற பழிக்கு ஆளாவேன். பின்பற்றுவதே மனித இயல்பு," என்று பகவான் கண்ணன் சொன்னதை, பகவான் ரமணர் நமக்குச் செய்து காட்டினார் அல்லவா?

'செய்யும் தொழிலே தெய்வம்', இல்லையா?

கடமைகளைச் செய்யாமல் சோம்பி இருப்பது, அவற்றைச் சரிவரச் செய்யாதிருப்பது இவை வேதாந்த மனப்பான்மை அன்று; வெட்டி மனப்பான்மை. எதையும் விட்டுவிட்டு ஓடுவது துறவாகாது. அது போக்கிரித்தனம். Escapism is not sanyas.

எனவே, இந்தச் சந்தையில் சேர்ந்து சலித்திருக்கும் போதும், நாம் இந்த சட உடம்பில்லை என்ற நினைப்போடு நம் கடமைகளைச் செய்யவேண்டும்.



அப்படிச் செய்யாமல் நான் யார் என்பது நான் யார் தெரியுமா என்று காட்டிக்கொள்ளும் வெற்று அறிவுஜீவித்தனமாகும். Mere depthless intellectualism.

ரமணர், பகவானாக மதிக்கப்படுவதற்குக் காரணம், அவர் பணியாளைக் காட்டிலும் எளியவராக இருந்ததே என்பதை ஒருபோதும் நாம் மறக்கக் கூடாது. பணிவும், கடமை உணர்வும் இல்லாமல் பரநிலை வாய்க்காது.

நெசவாளியின் திருக்குறள்தான் இன்றும் நம்மை வழிநடத்துகின்றது. துணி விற்ற கபீரின் தோகேக்கள் தான் நமக்கு பக்தி மூலம் தத்துவத்தை போதிக்கின்றன.

ரமணரின் மௌனம் இன்றும் முரசம் போல ஒலித்து நம்முடைய அறியாமையை உலுக்குவதன் முதற்காரணம் ஓர் எளிய, இனிய மனிதராக அவர் வாழ்ந்ததுதான்.

வீதியில் நடக்கக் கற்றுக்கொள்வோம்; விசாரணை தானே நடக்கும்!

# அக்ஷர மணமாலை– ஒரு தத்துவக் கருவூலம்

## டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்

### பகுதி–6

பிரம்மத்தை அடைவது என்பது மிகவும் கடுமையான ஒரு முயற்சி. எளிதில் அப்பேறு எல்லோருக்கும் கிட்டுவதில்லை. இதற்கு முக்கிய காரணம் நாம் கொண்டுள்ள தேகாபிமானம்தான். இந்த அபிமானம் நம்மை மேலும் மேலும் இக வாழ்வு என்னும் குழியில் தள்ளுகிறது. ஆசைகளை வளர்க்கிறது. புலன்கள் தறிகெட்டுப் பறக்கின்றன. இவற்றைக் கட்டுக்குள் வைத்து மனதை அடக்கி உள்முகப்பார்வையால் அந்தப் பரம்பொருளை அடைவது என்பது மிகப் பெரும் தவம். இந்த முயற்சி மிகவும் கடினமானது. துயரம் தரக் கூடியது (க்லேச: அதிகதர:) என்கிறது பகவத் கீதை.

*க்லேஶோதி$^4$கதரஸ்தேஷாம் அவ்யக்தாஸக்தசேதஸாம் ।*
*அவ்யக்தா ஹி க$^3$திர்துக்க$^2$ம் தே$^3$ஹவத்$^3$பி$^4$ர் அவாப்யதே ॥*

– கீதை 12.5

பற்றுகள் நிறைந்த மனம் பிரம்மத்தை அடைய முடியாது என்பது மட்டுமல்ல - அடைய முயற்சிகூட செய்யாது - என்பது அனைவரும் அறிந்த்தே. இதை பகவான் ‘பூமண மா மனம்’ எனக் குறிப்பிடுகிறார் இந்த வாடும் தன்மை படைத்த மலரின் குணத்தை விட்டு அழியாத பூரண மணத்தை அருணாசல ஈசனிடம் யாசிக்கிறார் ரமணர்.

*பூமண மாமனம் பூரணமணம் கொளப்*
*பூரணமணம் அருள் அருணாசலா*

– அக்ஷர மணமாலை 69

மனம் மிகவும் சக்தி படைத்தது. இருந்த இடத்திலிருந்தே பல்லாயிரம் மைல்களை, சில கணங்களில் கடந்து செல்லக் கூடியது. நன்மை தீமை இரண்டிற்கும் காரணம் மனமே. இந்தக் குரங்கை அடக்கிச் சும்மா இருப்பதே பெரும் தவம். எனவே இதை 'மாமனம்' என அழைத்தார் போலும். கீழ்ப் பாடலில் (அக்ஷர மணமாலை 68) 'புல்லறிவு, நல்லறிவு' என்று விளக்கிய பகவான் இங்கு பூமணம் என்று ஏன் சொன்னார் என்பதற்கு நாமாக விளக்கம் காண முயற்சிக்கலாம். நம்மில் பலர் நல்ல - தீய எண்ணங்களை மாறி மாறி அனுபவிக்கின்றோம். நல்ல எண்ணங்கள் சிறிதுகாலம் நம்மிடையே காணக் கிடைக்கிறது. ஆனால் விரைவிலேயே அவை மறைந்து விடுகின்றன. இந்த சஞ்சலிக்கும் மனத்தை பூமணம் என்று அழைப்பதும் சரியே. மேலும் வாசனை என்பது நம்முடைய கர்ம பலன்களால் அமையப் பெருவது. மணமே 'வாசனை' தானே. அழகிய சொல்லால் மனத்திற்கு ஒரு நல்ல விளக்கமளிக்கிறார்.

அடுத்ததாக பூரண மணம் என்னும் சொல் இருமுறை இடம் பெறுகிறது. தாற்காலிகமான பூமணத்திலிருந்து நிரந்தரமான பூரண நிலையை வேண்டுகிறார். இது அழிவற்றது. இந்நிலையை அடைந்தவர் எங்கும் பரம் பொருளையே காண்கின்றனர். இது மிகப் பெரிய வரம். இப் பூரண நிலையை எளிதில் எவரும் பெற முடியாது. அதற்கு அருணகிரிநாதனின் பூரண அருள் வேண்டும். சாதாரணர்களுக்கு இந்த நிலையை பெரிய மனம் கொண்டு அருள வேண்டும் என்பது பகவான் நம் பொருட்டு செய்யும் பிரார்த்தனை.

இக்கருத்தையே இறைவனுக்கு சரணாகதியாக அளிக்கிறார் மாணிக்கவாசகர். பற்றுகள் அறுந்த நிலையில் பண்பட்ட உள்ளம் படைத்த சான்றோர் இறைவனடி சேருகின்றனர். நம் உள்ளத்திலோ எல்லை

இல்லாத கவலைகள்; பல்வேறு பயங்கள்; வளர்ந்து கொண்டே போகும் ஆசைகள். இந்தக் கவலை - பயம் - ஆசை என்ற மூவர் கூட்டணி மிகவும் வலிமை வாய்ந்தது. இவை ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு உடையவை. இதன் காரணமாகவே பரமனை விட்டு விலகி விலகிச் செல்ல நேரிடுகிறது.

செழும் கமலத் திரள் அன, நின் சேவடி சேர்ந்து அமைந்த
பழுத்த மனத்து அடியர் உடன் போயினர்; யான், பாவியேன்;
புழுக்கண் உடைப் புன் குரம்பை, பொல்லா, கல்வி ஞானம் இலா,
அழுக்கு மனத்து அடியேன்; உடையாய்! உன் அடைக்கலமே.

– அடைக்கலப் பத்து

இந்த மணிவாசகரின் கருத்தையே கீதையிலும் மேலே பார்த்தோம்.

நாவுக்கரசர் சூலை நோயால் தவித்த நிலையில், அவர் சார்ந்த சமண சமயத்தார் செய்த மருத்துவங்கள் பலனளிக்காது போயின. மந்திர தந்திரங்களும் மயிற்பீலியும் அவர் நோயைத் தீர்க்க இயலவில்லை. வேறு வழியின்றி யாரும் அறியாவண்ணம் நள்ளிரவில் தன் இருப்பிடத்தைத் துறந்து அவர்தம் தமக்கையார் வாழும் ஊரை அடைகிறார். சிறந்த சிவ பக்தையான திலகவதி அம்மையார், தன் தம்பி பரம்பரையான சைவத்தைத் துறந்து சமண மதத்தைச் சார்ந்ததனால் மிகவும் மனம் நொந்து போகிறார். நைந்த இளவலின் உடல் உபாதையும் அவர் சோகத்தை அதிகரிக்கச் செய்கிறது. எட்டு வீரட்டானத் தலங்களில் ஒன்றான திருவதிகையில் உறையும் சிவபெருமான் ஆலயத்திற்கு நாவுக்கரசரை அழைத்துச் செல்லுகிறார். அங்கு ஆண்டவன் சந்நிதானத்தில் தன் பிழை பொறுத்து சுரம் நீக்க ‘கூற்றாயினவாறு’ என்னும் பதிகத்தை அவர் பாடுகிறார். பிறை சூடிப் பெருமானருளால் நோய் நீங்கப் பெற்று சிறந்த சிவ பக்தராகிறார். பல்வேறு தலங்களுக்குச் சென்று தன் உழவாரப்படைத்

தொண்டினால் புற அழுக்கை நீக்குகிறார். அதே போன்று மனதை உருக்கும் பதிகங்களால் நம் அக அழுக்கையும் நீக்குகிறார்.

இவ்வாறு தலயாத்திரை செய்யும்போது திருக்கோளிலி என்னும் சிவத்தலத்தை அடைகிறார். அங்கு அவர் பாடும் பாடல் முன்னர் திருவதிகையில் பாடிய தேவாரப் பாடலுக்குத் தொடர்ச்சியாக அமைகிறது.

முன்னமே நினையாது ஒழிந்தேன் உனை
இன்னம் நான் உன் சேவடி ஏத்திலேன்
செந்நெல் ஆர் வயல் சூழ் திருக்கோளிலி
மன்னனே அடியேனை மறவலே

"சமண சமயத்தில் பல காலம் கழித்ததால் காலத்தை வீணாக்கினேன். உன் அருள் பெற்ற பின்பும் உன் சேவடி போற்றும் மாண்பினை அடையவில்லை. என்னை மறவாமல் காத்தருள வேண்டும்" எனப் பாடுகிறார். அல்லும் பகலும் இறைவனைத் துதிப்பதன்றி வேறொன்றறியாதவர். ஏன் இவ்வாறு இறைஞ்சுகிறார்? இதுவே ஞானிகளின் போக்கு. தம்மைச் சாதாரண பாமர்களின் நிலைக்குத் தாழ்த்தி அவர்களின் நோக்கில் பரமனைக் காண்பார்கள். இத்தலத்தில் மனமுருகி அவர் மேலும் பாடுவார்,

நாளும் நம்முடை நாள்கள் அறிகிலோம்
ஆளும் நோய்களோர் ஐம்பதோடு ஆறெட்டும்
ஏழமைப் பட்டிருந்து நீர் நையாதே
கோளிலி அரன் பாதமே கூறுமே

நம்மைப் பல்வேறு விதமான தொண்ணூற்றியெட்டு நோய்கள் (நோய்களோர் ஐம்பதோடு ஆறெட்டும்) வருத்துகின்றன. இந்நிலையில், நமக்கு நம்முடைய வாழ்வின் எல்லையை அறியும் திறமை இல்லை. இத்தகைய கீழ்மையான நிலையில் இருந்து வாடும் நாம் இறைவன் புகழ் பாடி அவன் திருவடிகளைப் பற்றி

உய்ய வழிகாண முயல வேண்டும். வேறு வழி இல்லை என்று வலியுறுத்துகிறார்

மணிவாசகரைப் போன்றே, நம்முடைய நைந்த நிலையை அக்ஷரமணமாலையிலும் பார்க்கக் கிட்டுகிறது. பகவான் ஒரு குழந்தை தாயிடம் முறையிடும் பாணியில் வருணிக்கிறார்.

நகைக்கு இடம்இலை நின்நாடிய எனை
அருள்நகையிட்டுப் பார்நீ அருணாசலா

– அக்ஷரமணமாலை 53

குற்றம் நிறைந்த எனைப் பார்த்து நகைக்காதே, ஏளனம் செய்யாதே என்னும் இந்தப் பிரார்த்தனை பகவான் நமக்காகச் செய்கிறார். நாமே நம்முடைய கடந்த கால வாழ்க்கையை நோக்கும்பொழுது, பல முறை நம்முடைய செயல்களையும் எண்ணங்களையும் பார்த்து 'நானா அப்படி செய்தேன்?' என வியக்கிறோம். அப்படியிருக்க பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக கோடிக்கணக்கான மாந்தரின் பலவீனங்களையும் பாவச் செயல்களையும் அந்தர்யாமியாக உள்நின்று பார்த்துக் கொண்டிருக்கும் பரமனுக்கு உலக இயல்பைக் கண்டு நகைக்க வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அது இறைவனின் குணத்திற்கு ஏற்றதன்று. ஒரு தாயின் நிலையில் இருந்து அவன் நம்மைக் கண்காணிக்கிறான். தாய், சிசுவைக் குளிப்பாட்டி நல்ல உடை பூட்டி அழகு பார்க்கிறாள். ஆனால் குழந்தையோ குப்பை மேட்டிற்கு ஓடிச்சென்று உடலை அழுக்காக்கிக் கொள்கிறது. இளம் சூட்டில் சுவையான பாலை அளிக்கிறாள் தாய். குழந்தை அதைக் குடிக்க அடம் பிடிக்கிறது. ஆனால் சாக்கடை நீரை விரும்பி வாயில் இட்டுக் கொள்ளுகிறது. வயதான குழந்தைகளான நாமும் பலமுறை இவ்வாறே நடந்து கொள்ளுகிறோம். வீம்பும் கோபதாபங்களும் நம்மை விட்டு அகல்வதில்லை. பற்றுகள், சம்சார சாகரத்தில் மீண்டும் மீண்டும் நம்மைத் தள்ளுகின்றன என

அறிந்தும், அதையே பற்றுகிறோம். இவ்வாறு குப்பை மேட்டை நோக்கியே விருப்பத்துடன் ஓடும் நம்மைப் பார்த்து அந்தப் பரம்பொருள் சிரிப்பதில்லை. மாறாக ஒரு தாயின் கருணை உள்ளத்தோடு நம்மிடம் அருள் பாலிக்கிறான்.

குழந்தை சிறிதுநேரம் விளையாடும். பின்னர் பசித்தாலோ தூக்கம் வந்தாலோ தாயிடமே வந்து சேரும். உடலில் அடிபட்டாலும் அழுதுகொண்டே ஓடி வரும். எந்த நிலையிலும் தாயே அடைக்கலம். வளர்ந்த நமக்கும் இந்த நிலைதான். துன்பம் வந்தால் இறைவனையே நாடிச் செல்கிறது இவ்வுலகம். அதைத்தான் ரமணரும் 'நின் நாடிய எனை' என்ற வரியில் குறிப்பிடுகிறார். எல்லா ஆட்டமும் ஓய்ந்த பின்னர் ஆண்டவனே கதி என சரண் புகும் பலரை நாம் பார்ர்க்கிறோம். அதுவன்றி சிறு வயது முதலே ஓரளவு மனப் பக்குவம் கைவரப் பெற்ற அன்பர்களும் உண்டு. இவர்கள் அனைவருமே குற்றங்கள் பல புரிந்தாலும் இறைவனின் தொடர்பைப் பற்றியே அமைகின்றனர். அவ்வாறு தன்னை நாடி வரும் பக்தரனைவரையும் புன்சிரிப்புடன் அவன் ஏற்றுக்கொள்கிறான். தாய் அடம் பிடித்து ஓடி அழுக்கான மேனியுடன் வரும் குழந்தையை ஒதுக்குவதில்லை. குழந்தையின் அணைப்பே அவளுக்குப் பேருவகை அளிக்கிறது. பாசமிகும் புன்சிரிப்போடு அவள் குழந்தையைக் கட்டிக் கொள்கிறாள். இதே போன்று 'கருணை மிகும் சிரிப்போடு என்னைப் பார்' என்பார் பகவான்.

அவருடைய மேற்சொன்ன பாடலின் வரிகளில் இக்கருத்தின் சாரத்தைப் பார்க்கலாம்.

நகைக்கு இடம் இலை = எம்மிடம் குற்றம் கண்டு நகைக்காமல்

*நின் நாடிய எனை = நீயே கதி என்று வந்தடைந்த என்னை*

*அருள் நகையிட்டு நீ பார் = புன்சிரிப்புடன் பார்ப்பாயாக.*

'நகை' என்ற சொல்லை இருவிதமாகப் பார்க்கலாம். இதற்கு ஆபரணம் என்னும் பொருளும் உண்டு. அருளையே அணிகலனாகக் கொண்டு என்னை நோக்கு - என்றும் பொருள் கொள்ளலாம். அவ்வித சூழலில் ஆண்டவன் கருணை என்னும் ஆபரணத்தோடு இன்னும் பேரழகோடு ஜொலிக்கிறான். எல்லையற்ற குணவதியாகப் பிரகாசிக்கும் பராசக்தியான லோகமாதாவை சங்கர பகவத்பாதர் அழகு மிகுந்தவளாகப் பார்க்கிறார், 'சௌந்தர்யலஹரி' என்னும் நூலில். பிராயத்தில் முதிர்ந்த தாய் அழகு படைத்தவளாக இருக்கக் காரணம் அவளுடைய தயை என்னும் அணிகலனே.

இந்த தயை என்னும் குணத்தையே பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு வேதாந்த தேசிகர் என்னும் வைணவ ஆசாரியர் 'தயாசதகம்' என்று நூறு சுலோகங்களில் நயம்பட உரைக்கிறார்.

பக்தி மார்க்கத்திலிருந்து இறைவனை நாடும் வழியைப் பார்த்தோம். இதையே தத்துவ வழி மூலமாகவும் காண இயலும். உபநிஷதங்கள் தகராகாசத்தைப் பற்றிப் பேசுகின்றன. ('தத்ராபிதஹ்ரே ககனம் விசோக: தஸ்மின் யதந்த: தத் உபாசிதவ்யம்'.) நம் உள்ளிருக்கும் அந்த மெய்ப்பொருளை அறிவதே நம் வேதாந்தத்தின் அடிப்படை நோக்கம். உலகத்தில் உள்ள கோடானுகோடி மக்கள் அனைவரின் உள்ளத்திலும் அந்த பிரம்மம் குடிகொண்டுள்ளது. அவனை அறிய நமக்கும் அவனுக்கும் இடையே உள்ள தடைகளை நீக்க வேண்டும். இந்தத் தடைகள் சம்சாரத்தால் ஏற்படும்

காம, க்ரோத, மோஹ, லோப, மத, மாத்சர்யம் போன்ற தீக்குணங்களே. இத்தடைகளை விலக்கினால் பரமனை நம்முள்ளேயே நாம் உணர இயலும்.

இந்த நிலையில் இந்திய வேதாந்தம் மற்ற கோட்பாடு களிடமிருந்து சற்று வேறுபடுகிறது. மற்றவை இறைவனை அடைய வழி காட்டுகின்றன. நம் வேதாந்தம் இறைவனை உணர வழி காட்டுகின்றன. நம்மிடமிருந்து மாறுபட்ட ஒன்றை அடைய இயலும். நம்முடனே இருக்கும் ஒன்றை அடைய வேண்டியதில்லை; உணர்ந்தாலே போதும் அல்லவா.

இப்பரம்பொருள் நம்மை எங்கும் சூழ்ந்து கொண்டிருக்கிறது. அதை உணருவது நம் இயற்கையான நுண்ணுணர்வே எங்கிறது வேதம்.

*ஏக ஏவ அக்னி: பஹுதா சமித்த; ஏக: சூர்யோ விஸ்வம் அனுப்ரபூத: ।*
*ஏகைவோஷா: சர்வம் இதம் விபாதி ஏகம் வா இதம் வி பபூவ சர்வம் ॥*
*ரிக் வேதம் 8.58.2*

அக்னி, ஸூர்யன், உஷஸ் (வைகறை) என்பவை எங்கும் வியாபித்து நிற்பதுபோல, அந்த ஒரு பரம் பொருளே எல்லாமாகி நிற்கிறது. ஒன்றெ பலவிதமாகக் காட்சி அளிக்கிறது. அந்த வேறு பட்ட சக்திகளும் எங்கும் காணப்படுகின்றன. ஆனால் அனைத்தும் ஒன்றே. ஒன்று பலவிதமாவதும், அவையனைத்தும் ஒன்றில் ஐக்கியமாவதும் வேதம் கண்ட தத்துவ விளக்கம். ஆண்பால் சொற்களான அக்னியும், சூர்யனும் மற்றும் பெண்பால் சொல்லான உஷஸும், 'ஏகம்' என்னும் தனிப் பாலாக அஃறிணைச் சொல்லாக அடங்குவது வேதத்தின் சிறப்பு. கர்ம மார்க்கத்தை வலியுறுத்தும் வேதமும் ஞானத்தில் நம்மை நிலை நாட்டுவது நோக்கத் தக்கது. 'அதுவே அக்னியும் வாயுவும் சந்திர சூரியர்களும். நீரும் ஒளியும் பிரம்மமுமாகிறது' (யஜுர் 32.1).



இதுவே நம் தத்துவம். நம்மைச் சூழ்ந்துள்ள அனைத்திலும் அந்தப் பரம்பொருளையே காணுகிறோம். அதை எங்கும் உணருகிறோம். அதனுடனே நம் வாழ்க்கைப் பயணம் நடைபெறுகிறது. காக்கைச் சிறகினிலே பாரதி கண்ணனைக் கண்டான். ஞானியர் பரம்பொருளை எங்கும் காணுகின்றனர்.

இந்த வெளி சக்திகள் அனைத்தும் நம்மிடமே உள்ளது என்று உணருகிறோம். பகவான் அளித்த தாரக மந்திரம் இதுவே. இந்த 'நான் யார்' என்னும் விசாரமே வேதாந்தத்தின் எல்லை நிலம். இங்கு பக்தி - ஞான - கர்ம மார்க்கங்கள் சங்கமிக்கின்றன. அத்வைதமும் த்வைதமும் தத்தம் வேறுபாடுகளை துறக்கின்றன. சுக துக்கங்கள், விருப்பு வெறுப்புகள் என்னும் இருமைகள் பேதம் இழக்கின்றன. இதை நம்முள்ளே உணர்தலே ஞானம். (தொடரும்)

# பேரமைதி நிலவிய திருநாட்கள் – 3

## மௌனி சாது

### பகவானது ஆஸ்ரமத்தில் எனது வாழ்க்கை

அடுத்த சிலநாட்களில் ஆசிரம நடவடிக்கைகளில் எனக்குப் பரிச்சயம் ஏற்படலானது. பகவானின் திருமுன்னர் அமர்ந்து தியானித்தல் உணவு இடைவேளைகள் மற்றும் பல ஒழுங்குமுறைகளை நான் அறியலானேன்.

நான் எனது நாட்டிலிருந்து எனக்காகக் கொண்டு வந்திருந்த சில உணவுப் பொருட்களை எறும்புகளின் படையெடுப்பில் இருந்து நான் பாதுகாக்க வேண்டி இருந்தது. எதுவுமே உள்ளே நுழைய முடியாதபடி அந்த டின்கள் இறுக்கமாக மூடப்பட்டு இருந்தாலும், சர்க்கரை, பிஸ்கட் மற்றும் தேன் அடங்கிய கலன்களுக்குள் எப்படியோ அவை புக வழி கண்டுபிடித்தன. அருகில் இருந்த குழாயில் இருந்து குடிநீர் கொணரவும் நான் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டி இருந்தது.

ஆச்ரமத்தின் எளிமையான நடைமுறைகள் அங்கு தங்குவோர்க்கு மன ஒருமைப்பாட்டுக்கும், தன்னுள் ஆழ்ந்து கொள்வதற்கும் துணை செய்கின்றன. பல்வேறுபட்ட சாதகர்கள் ஒன்றாகக்கூடி, தனது ஆசானின் வழிகாட்டுதலின்படி, தன்னைத் தானே அறியும் ஒரே நோக்கத்துடன் தியானிக்கும்போது, மனம் உண்முகப்பட்டு, அந்த சூழ்நிலையே ஆன்மீகக் கதிரியக்கம் பொருந்தியதாய் ஒளிர்கிறது. நம் கண்ணுக்குத் தெரியாத, அதேசமயம் வலிமை பொருந்திய அருணாசல மலையின் அருட்சக்தியும்,

இந்த ஆன்மிகச் சூழ்நிலை உருவாவதற்குக் துணை புரிகிறது. அதைப் பற்றிப் பின்னால் கூறுவேன்.

காலை 7 மணிக்கு எங்களைக் காலைச் சிற்றுண்டிக்கு அழைக்கும் மணி ஒலிக்கிறது. நான் உணவுக்கூடத்தை அடைந்தபோது, மஹரிஷி அதன் படிகளில் ஏறி உள்ளே வருவதைக் கண்டேன். அவரைத் தொடர்ந்து அவரது இந்திண அணுக்கத் தொண்டர்கள் வந்தனர். முழு வெளிச்சத்தில் அவரைக் கண்ணுறும்போது, மஹரிஷி மிகவும் உடல் நலிவுற்று இருப்பதைக் கண்டேன். அவரது மூட்டுகளும், முழங்கால்களும் மூட்டு வாதத்தால் பாதிக்கப்பட்டு, அவர் சிரமத்துடன் நடந்து வந்தார். ஆறு மாதங்கட்குமுன் அவரைத் தாக்கிய புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, இரண்டு ரண சிகிச்சைக்குப் பின்னரும் குணமாகாது, அவரது இடக்கையில் பேண்டேஜ் போடப்பட்டு இருந்தது. வேகமாகப் பரவிவந்த இந்தப் புற்று, ஓராண்டுக்குப் பின்னர், பகவானின் உயிரையே உண்ணப் போகிறது. சிலசமயம் அவரது தலை ஆடத் துவங்கி அவரது ஆரோக்கியமற்ற உடல்நிலையை உறுதிப்படுத்தியது. ஒருகாலத்தில் உயர்ந்து சக்தியுடன் இருந்த அவரது உடலம், இப்போது, மெலிந்து, தளர்ந்து, ஒடுங்கி இருந்தது.

கூடத்தை அடைந்தபின்னர், பகவான் வாசலுக்கு எதிரேயுள்ள சுவரில் சாய்ந்து அமர்ந்தார். தனியே அவர் அமர்ந்து இருக்க, அவர் முன்னிலையில் ஆஸ்ரமத்தில் தங்கியிருப்போர் உணவு அருந்த, வாழை இலைகள் விரிக்கப்பட்டன. பகவானுக்கு மூன்று கஜம் தள்ளி அவரது வலப்புறத்தில் நான் அமர்ந்தேன். நான் ஆஸ்ரமத்தை விட்டு நீங்கும்வரை, அதுவே நான் உண்ணும் இடம் ஆனது.

பகவான் இந்திய முறைப்படி தனது கரத்தாலேயே உண்டார். அவரது இயக்கங்கள் தற்செயலாக

நிகழ்வதுபோல் அமைந்து இருந்தன. அவர் தன்னைச் சுற்றி என்ன நிகழ்கிறது என்பதை முற்றும் உணர்ந்திருந்தார் என்பதையும், வெளிநிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒரு சராசரி மனிதன் போலவே காண்பதையும் கண்டேன். அதேசமயம் அவரது இதயம் வெளிஉலக நிகழ்ச்சிகள் எவற்றாலும் பாதிக்கப்பெறாது ஸ்வயமான ஆத்ம உணர்வுடன் திகழ்வதை உணர்ந்தேன். சிலநாட்களின் பின்னர், இந்த பௌதிக உலகில் தாம் பங்கேற்றது ஒரு கனவுலகில் நடமாடுவது போன்றதே என்று அவரே வறிய உண்மையினை நான் பிரத்யட்சமாக அறிந்தேன். அவர் காட்டியது போலவே இந்த வெளி உலகை ஒரு கனவு என்று நான் உணர்ந்தாலன்றி, நான் எனது ஆன்மீக மெய்ம்மையை அறிய முடியாது என உணர்ந்தேன்.

இந்த உண்மையை மனதில் பதித்து உறுதிப்படுத்திக் கொள்வதுதான், நமது பந்தனைகள் நாம் கட்டறுக்கும் சாதனையின் முதல்படி. நாம் வாழ்நாள் முழுவதிலும் நம் மனது பொருளற்ற எண்ணங்களில் ஈடுபட்டு, நம்மை எண்ண வலைகளில் சிக்க வைக்கிறது. பகவானின் ஐரோப்பிய சீடர் ஒருவர் கூறினார்: ‘நம் மனது தனக்குத்தானே பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொண்டு, அவற்றிலிருந்து விடுபட முயல்கிறது. இந்த முயற்சியில் அது வெற்றி பெறமுடியாது. ஏனெனில், மனதின் குறுகிய செயல்பாட்டால் இதில் வெற்றிகாண இயலாது.’

ஆஸ்ரமத்தில் மூன்று உணவு இடைவேளைகள் இருந்தன. 11.30 மணியளவில் நண்பகல் உணவு, இரவு 7.30 மணியளவில் இரவு உணவு மற்றும் மாலை 3.30 மணியளவில் தேநீர் டீயோ, காஃபியோ அன்றி பாலோ எதை விரும்பினாலும் அது அளிக்கப்பட்டது. உணவு நன்கு தயாரிக்கப்பட்டு இருந்தாலும், அதில் இந்திய முறைப்படி மிளகு, மிளகாய் போன்று சற்று

காரம் இடப்பட்டதால், என்போன்ற ஐரோப்பியர்கட்கு அது நாக்கையும், வயிற்றையும் தகிப்பதுபோல் இருந்தது. ஆனால், இத்தகைய கார உணவு இந்திய சீதோஷ்ண நிலைக்குத் தேவையானது என்று விரைவில் உணர்ந்த நான், பெரும்பாலான உணவுகளைச் சுவைக்கத் தொடங்கினேன். நான் சிலவற்றைச் சாப்பிடாமல் ஒதுக்குகிறேன் எனக் கண்ட ஆஸ்ரம அந்தண ஊழியர்கள், அவர்களாகவே காரம் மிகந்த பண்டங்களை எனக்கு அளிக்காமல் விட்டார்கள்.

மஹரிஷி எல்லாவற்றிலும் சிறிதளவே உண்பார். உணவின் இறுதியில் அவர் சாதத்தில் மோர் கலந்து உண்பார். 'போதும்' என்று தோன்றியதுமே, தனக்கு உணவு அளிப்பதை நிறுத்திவிடுமாறு சைகை காட்டுவார்.

அவர் உண்டு முடித்தபின், அவரது இலையில் ஒரு பருக்கைக்கூட மிச்சம் இருக்காது. இந்து சமய விதிமுறைகள், சாப்பிடுவது உட்பட, ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு மனிதன் எப்படிப் பின்பற்ற வேண்டும் என்று வகுத்துள்ளன. அதன்படி பரிமாறிய உணவைச் சிறிதும் இலையில் மீதம் வைக்கக்கூடாது. தொடக்கத்தில் இந்த உலகத்தையே ஒரு ஐம்புலன்கள் சிருஷ்டிக்கும் பொய்ம்மையே என்று அறிந்த ஒரு மாமுனிவர், எதற்காக இத்தகு உலக ஆசாரங்களைப் பின்பற்றுகிறார் என்று எண்ணிக் குழம்பினேன். காலம் செல்லச்செல்ல, பகவான் சந்நிதியில் நான் அமர்ந்து இருக்கும்போது, எனது எண்ணங்கள் அடங்கி, மனம் பேரமைதி பெற்று, இதுபோன்ற எல்லா சந்தேகங்களுமே தாமே மறையத் தொடங்கின.

நாம் ஆஸ்ரமத்தில் இருந்த ஆரம்ப நாட்களில், சாப்பிடும் அல்லது உறங்கும் நேரம் தவிர எல்லா நேரத்தையுமே உணவுக்கூடத்திற்கு எதிரே உள்ள ஒரு மூங்கில் கூரைபோடப்பட்ட, நூல் நிலையத்துக்கு

எதிரே உள்ள கூடத்திலேயே கழித்து வந்தார். சில தலையணைகளும், பஞ்சுத் திண்டுகளும் போடப்பட்டிருந்த ஒரு கல்சோபாவில் அவர் வீற்றிருக்கலானார்.

அவரது பக்தர்களும், வருகை தந்திருப்போரும், பகவானுக்கு எதிரே தரையில் அமர்ந்து இருந்தனர். காலை, மாலை தியான வேளைகளின்போது அருணாசலக் குகைகளில் தங்கி இருந்த பகவானின் பல்வேறு சீடர்கள் அங்கே வந்து அமர்ந்தனர். தினந்தோறும் வேதங்கள் அங்கே ஓதப்பட்டன. இரவு உணவுக்குமுன் தெய்வீகக் கீதங்களும், பகவான் இயற்றிய பாடல்களும் பாடப்பெற்றன. பதினைந்து நாட்கட்கு ஒருமுறை, ஓர் கற்றறிந்த அந்தணர் அகிலத்தைத் தோற்றுவித்த ஈஸ்வர சக்தியைக் குறித்த அழகிய பாடல் ஒன்றை மிக இனிமையாகப் பாடுவார். அதன்பொருள் எனக்கு விளங்காவிட்டாலும், அதனுடைய எழில்மிக்க பண் சிறப்பால் நான் பெரிதும் ஈர்க்கப்பட்டேன். எனது ஆஸ்ரம வாழ்வின் பல்வேறு நிகழ்வுகள் போலவே இதுவும் என் உள்ளத்தே ஆழப் பதிந்துள்ளது. மிக எழிலுடன் முடியும் ஒவ்வொரு வாக்யத்தின் போக்கும் அதன் சந்த அழகும் என் மனத்தை முற்றிலும் ஈர்த்தது.

பின்னாளில், உலக வாழ்வின் துன்பங்களுக்கு இடையே நான் பகவானின் உபதேசமாகிய “உன்னுடைய உண்மை ஆன்மாவை உணர்வாயாக!” என்பதை அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டு, அதன் தேவையினை உணரும்போது எல்லாம், இந்த கீதத்தின் ரீங்காரம் என் மனதில் எழும்பி, எனது ப்ரக்ஞையில் ஒருமையை ஏற்படுத்தியது.

ஆஸ்ரம வாழ்வின் ஒழுங்கினை நான் அறிந்து, அதற்குத் தக்கபடி என்னைப் பண்படுத்திக் கொள்ள சிலநாட்கள் பிடித்தன. பின்னர் பகவானை என்

மன ஒருமைப்பாட்டின் மூலமாகவே அணுகத் தொடங்கினேன். ஆரம்பத்தில் பகவானைச் சூழ்ந்து இருந்தோர் வாழ்வில் அவர்கள் செய்யும் பிழைகள் எனக்குக் குழப்பத்தை ஏற்படுத்தும். எனக்குக் கிடைத்துள்ள அற்புதமான தருணங்களை இங்ஙனம் தவறு காண்பதில் வீணடித்துக் கொண்டு இருந்தேன். இதுறும் எனது அஹங்காரம் என்னும் ஒரு சிறு துளையின் வழியாகவே பகவானை நோக்கிக் கொண்டு இருந்தேன். இத்தகைய செயலை நிறுத்தி, நான் உயரிய பாதையில் தன்முனைப்பு நீங்கிச் செயல்படுவதன் மூலமே, நான் ஆத்மஞானம் பெறமுடியும் என்பதை உணரத் தலைப்பட்டேன்.

மறை மனோதத்துவ நிபுணர்கள் அறிந்துகூறும் ஒரு சிக்கலின் ஊடே நான் பயணித்துக்கொண்டு இருந்தேன். மனமானது தர்க்க வாதங்களில் ஈடுபடலாம், உயரிய கருத்துக்களைக் குறித்து வாதிக்கலாம், ஆசார்யனது வழிகாட்டலின் கீழ், தத்துவ ஞானத்தை எடுத்து இயம்பும் பலநூல்களைக் கூட இயற்றலாம். ஆனால் நேருக்குநேர் பேருண்மையைச் சந்திக்கும் அனுபவம் சமீபிக்கும்போது, இதுகாறும் புத்திபூர்வமாகக் கூறப்பட்ட உண்மைகளை வாழ்ந்து காட்ட நேரும்போது, அனுபவத்துக்கும் அறிவுக்கும் இடையே ஒரு பிளவு தெரிகின்றதே, ஒரு தவறாக சுருதி எழுகின்றதே! இதுவே என் கவலை.

எனினும் நாட்கள் செல்லச் செல்ல, பகவானிடமிருந்து வெளிப்படும் ஆன்மீகக் கதிரியக்கம் மெதுவாகத் தன் வேலையை என் கண்ணுக்குப் புலப்படாமலேயே செய்துகொண்டு இருந்தது. முதலில் இதுகுறித்து அவரிடம் கேட்கலாமா என்று எண்ணினேன். ஆயினும் எதுவும் உருப்படியாகக் கேட்கமுடியாது என்று எண்ணி, மௌனம் காத்தேன். இறுதியில் ப்ரக்ஞை உணர்வு எனக்கு வழிகாட்டியது.

"ஒரு குருவிடமிருந்து ஒரு சீடனுக்குத் தரப்படும் உபதேச முறை எனில் மிகச் சக்திவாய்ந்த முறை மௌன உபதேசமே ஆகும். ஆத்மாவின் ஆழத்தில் பொதிந்துள்ள பேருண்மைகளைத் தெரிவிக்க வேறு வசதி ஏதும் இல்லை" என்பது பகவானின் உபதேசம்.

எனவே பகவானைச் சூழ்ந்திருந்த ஆழ்ந்த மௌனத்தை நான் கவனிக்கலானேன். பகவானிடமிருந்து வெளியாகும் ஆன்மிக அதிர்வுகளை உள்வாங்கிக் கொள்ள நமது மனக்கதவைத் திறக்க வேண்டும்; அதற்கு எவ்வளவு உயர்ந்த அளவில் மன ஒருமைப்பாடும், எண்ணக் கட்டுப்பாடும் தேவைப்படுகிறது என்பதை நான் உணரலானேன். பகவானின் ஆன்மிக அதிர்வுகளை இங்ஙனம் ஆழ்ந்த மன ஒருமைப்பாட்டுடன், உள் வாங்கிக் கொள்ளும்போது, அது மிக உயர்ந்த தீக்ஷைக்கு வழிவகுக்கிறது. நான் இதுகாறும் செய்துவந்த ஆன்மிகப் பயிற்சிகள் அனைத்தும் குறைபாடுள்ள அரைகுறை அப்யாசங்கள் என்பதை உணரலானேன். ஆரம்பத்தில் நான் இதுகாறும் பின்பற்றிவந்த ஆன்மிகப் பயிற்சிகள் இப்படிப் பயனற்றுப் போயினவே என்ற மனவருத்தம், அவற்றைச் சரியானபடி மாற்றி அமைக்க வேண்டுமே என்ற கவலையும் இருந்தது.

உயரிய ஆன்மிகச் சூழ்நிலையை எங்ஙனம் பயன்படுத்திக்கொண்டு ஆன்மிகப் பேருண்மைகளைக் கிரகித்துக் கொண்டு முன்னேறுவேன் என்பது முழுக்க முழுக்க என்னுடைய ஆர்வத்தினையும் முயற்சியையும் பொறுத்தே அமையும் என்பதை உணர்ந்தேன். பகவானின் திருவடி நிழலுக்கு நான் வந்து சேர்ந்து இருப்பது ஒரு மகத்தான தருணமாக அமைந்துள்ளது. இதை நான் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை எனில் இத்தகு வாய்ப்பு மீண்டும் கிடைப்பது என்பது மிக அரிதாகம் என்பதையும் உணர்ந்து இருந்தேன்.

எனது இருப்பினுள்ளே எந்த அளவில் ஆன்மிக ஒளி பாய்கிறது என்பது, எந்த அளவில் நான் எனது ப்ரக்ஞை உணர்வாகிய கதவினைத் துறந்து வைத்து உள்ளேன் என்பதைப் பொறுத்தே அமையும்.

இதை வாய்வார்த்தையாகக் கூறிவிடலாம்; ஆயினும் இத்தனை நாளாக என்னுள் வேர்விட்டு இருந்த கருத்துக்களையும், நெஞ்சில் ஆழப் பதிந்துள்ள நம்பிக்கைகளையும் கெல்லி எறிவது என்பது எளிதான செயல் அல்ல. இதுகாறும் நான் எனது நம்பிக்கைகள் யாவும் அசைக்க முடியாதவை என்று எண்ணி இருந்தேன்; இப்போதுதான் இந்த பதரை ஒத்த நம்பிக்கைகள் யாவும் ஆத்மாவை உணர்ந்த மஹான் ஒருவர் சாந்நித்யமாகிய அக்நியின்முன் எரிந்துபடும் என்பதை உணர்ந்தேன். என்னுள் எழுந்த உள்குழப்பத்திற்கெல்லாம் காரணம் நான் முந்தைய ஆசாரியர்களிடையே ஒப்புமை காண முயன்றதுதான் என்பதை உணர்ந்தேன். கௌதம புத்தர், கிறிஸ்து மற்றும் பல்வேறு யுகபுருஷர்கள் ஆன்ம சாட்சாத்காரத்திற்கான பாதைகளைக் காட்டி உள்ளார்களே! தமது தெய்வீகத்தினை ஐயத்துக்கு இடமின்றி வெளிப்படுத்திய அந்த பேராசான்கள் காட்டிய வழிகளை நாம் பின்பற்ற வேண்டாமா? அவர்தம் கால்தடங்களை நாம் பின்பற்றி நடக்க வேண்டாமா!

இப்படி என் மனதில் குழுமி இருந்த பல்வேறு சந்தேகங்களையும் தயக்கங்களையும் நான் இங்கே விவாதித்துக் கொண்டு இருப்பது ஒரு பயனற்ற செயல். இந்த விசித்திரமான இடத்தில் என்னுடைய ஐயங்கட்கு நான் எதிர்பார்த்த வகையில் மிக விரைவாக விடைகள் வந்தன. எனக்குச் சொல்லப்பட்டது: ஒருசமயம் ஒரு ரோமன் கத்தோலிக்க தம்பதியினர், பகவானது ஒப்புயர்வற்ற சாந்நித்யத்தாலும், அங்கே

நிலவிய உயரிய ஆன்மிக அதிர்வினாலும் ஈர்க்கப்பட்டு, பகவானின் திருவடி நிழலில் அமர்ந்து இருந்தனர். கிருஸ்துவ சம்பிரதாயத்தில் கூறப்படும் ஒரு பிரார்த்தனை வாயிலாகத் தங்கள் உள்ளுணர்ச்சிகளை வெளிப்படுத்தினர். உடனே பகவான் கூறினார்: "அவர்கள் வேறு ஒருசம்பிரதாயத்தினைச் சார்ந்த இருப்பதால் தமது தலைவனுக்குத் தங்கள் பிரார்த்தனையை மொழிந்தனர். அதனால் என்ன! இங்கே எந்தப் பேதமும் இல்லை. இருப்பது என்பது ஒன்றுதான்."

நான் ஆஸ்ரமத்திற்கு வருமுன் பகவானைப் பற்றி நிறையப் படித்து உள்ளேன். தன்முன் வரும் ஒவ்வொரு மனிதனின் ஆழ்மனதில் என்ன உள்ளது என்பதை அவர் அறிவார். ஆயினும் தான் அங்ஙனம் அறிதலைப்பற்றி அவர் வெளிப்படுத்தியதே இல்லை; அதைப் பற்றிப் பேசியதும் இல்லை. இது எனக்கு எந்த ஒரு வியப்பையும் அளிக்கவில்லை. நானே பகவானின் இந்த அற்புத சக்தியைக் கண்கூடாக அனுபவித்து உள்ளேன். பகவானிடம் முழுநம்பிக்கை வைத்தலும் அவரது பிரக்ஞை உணர்வு பரமாத்மாவுடன் ஒன்றிய ஒன்று; அதேசமயம் தனது சீடனது ப்ரக்ஞையுடனும் ஒன்றிய ஒன்று என்பதை முற்றிலும் கிரகிக்காதவரை, ஆத்ம சாட்சாத்காரம் பெறுவது என்பது நமக்கு இயலாத ஒன்று.

அவரது சந்நிதியில் நான் சாந்து இருந்த நாட்கள் செல்லச்செல்ல, எனது தனிப்பட்ட ஒருவன் என்ற மேலோடு உடைந்து, கரைந்து, நான் அவருடன் ஒன்றலானேன். நான் அவர் அருகாமையில் இருக்கும்போது எல்லாம் இதை உணரலானேன். ஆஸ்ரமத்தின் சர்வாதிகாரி, புதிதாகக் கட்டிஉள்ள மாத்ருபூதேஸ்வரர் ஆலயத்தின் வெளிக்கூடத்திற்கு, சர்வாதிகாரியின் கூற்றின்படி பகவான் இடம் பெயர்ந்த

அன்று, என்னுடைய வாழ்நாளின் மிக முக்கியமான திருப்பம் நிகழ்ந்தது. இந்தப் புதிய ஆலயமும், கூடமும் அன்னையார் சமாதியான 1922ஆம் ஆண்டு தொடங்கிக் கட்டப்பட்டது. இது ஒரு இந்து ஆலயம் போல் அமைந்து உள்ளது. இந்த இடமாற்றத்தை பகவான் விரும்பவில்லை என்றும் அவர் தமது பழைய மூங்கில் வேய்ந்த சிறிய கூடத்திலேயே இருக்க விரும்பினார் என்று சிலர் கூறினர். ஆயினும் ஆஸ்ரம சர்வாதிகாரியும் மற்றும் சில அன்பர்களும் புதிய கூடத்திற்கு வருமாறு வேண்டியபோது, “நான் எங்கிருந்தால் என்ன! அங்கேயே வருகிறேன்” என ஒப்புதல் தந்தார்.

அவரது இருப்பிடமாக இனி அமையப்போகிய அந்தக்கூடத்தில், நீலக் கருங்கல்லால் வனையப்பட்டு, எழில்மிக்க வேலைப்பாடு அமைந்த கம்பளத்தில் போர்த்தப்பட்டு அது காத்து இருந்தது.

மாத்ருபூதேஸ்வரர் ஆலயம், இந்திய ஆகமமுறைப்படி அழகான சாம்பல் நிறக்கற்களால் கட்டப்பட்டு, சில நவீன வசதிகளுடன் அமைந்து இருந்தது. அதிகமான எண்ணிக்கையில் சிற்பங்கள் மற்றும் ஆடம்பர வளைவுகள் ஏதும் இன்றி, இடையிடை இட்ட மெல்லிய தூண்களுடன் அகன்ற பலகைகளுடனும், பல கதவுகளுடனும் இக்கோயில் காண்போர் உள்ளத்தைக் கவர்ந்தது. பகவானின் கட்டிலின் அருகே ஒரு புத்தக அலமாரியும் சிறிய மேஜையும், கடிகாரமும் அவருக்கு எதிரே ஒரு தூபக்காலும் அமைந்து இருந்தன. அந்தத் தூபக்காலில் செருகப்பட்டு இருந்த ஊதுபத்திகள் இருந்து நாள் முழுதும் நறுமணம் கமழ்ந்தது.

நண்பகல் வேளையில் பகவான் சம்பிரதாய முறையில் புதுக்கூடத்திற்குக் கொணரப்பட்டார். நான் காலை தியானத்திற்குப் பிறகு வெளியே சென்று விட்டபடியால், நான் அச்சமயம் அங்கே

இருக்கவில்லை. நான் பிற்பகலில் புதுக்கூடத்திற்கு வந்தபோது, நான் அமர ஓர் இடம் வேண்டியிருந்தது. பகவான் கண்பார்வையில் படும்படி அவரது அருகாமையில் இருந்த ஒரு தூணின் சார்பில் நான் அமர்ந்துகொண்டேன். அதன் மூலம் நான் எப்போதும் அவரது திருநயனங்களைக் காண முடிந்தது.

அந்தக் கூடம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. ஆண்கள் வலப் புறத்திலும் பெண்டிர் இடப்புறத்திலும் அமர்ந்து இருந்தனர். பகவானின் முன்னர் நகர்த்தக் கூடிய ஒரு தடுப்பு வைக்கப்பட்டு இருந்தது. வருகையாளர் அந்தத் தடுப்பு வரைதான் வரும்.

பகவான் வழக்கம்போல கால்களைச் சம்மணமிட்டு தியான நிலையில் பல திண்டுகளின்மீது சாய்ந்து கொண்டு தனது தலை சிறிதே தோளின்புறம் சாய்ந்து இருக்க அமர்ந்திருந்தார். அவரது பலவீனமான உடல் அன்று நடத்தப்பட்ட பல்வேறு பூஜை சடங்குகளினால் நலிவுற்று இருந்தது. அவரது சந்நிதியில் கூட ஒருவர்க்கு மனக் கலக்கம் ஏற்படும் என்று கூறமுடிந்தால், அவரது பலவீனமான தோற்றம் முதலில் எனக்குக் கலக்கத்தை அளித்ததே என்றே கூறுவேன். பின்னாட்களில் இந்தக் காட்சி எனக்கு பழக்கமாகி விட்டது. வெளித் தோற்றத்தைக் கண்டு கவலையுறாது இருக்க நானும் பழகிக் கொண்டேன் என்ற கலக்கமும் இல்லாமல் போனது.

காலை 5.15 மணிக்கு வேதபாராயணம் துவங்கும். அது 45 நிமிடம் நீடிக்கும். அதன்பின் பகவான் உலகெங்கிலும் இருந்து அவருக்கு எழுதப்பட்டு இருக்கும் கடிதங்களைப் பார்வையிடுவார். சிறிதுநேரம் தினசரி பத்திரிகைகளை மேலோட்டமாய பார்வை இடுவார். பின்னர், நீண்ட தாடியுடனும், ஒரு கௌபீனத்தை அணிந்துகொண்டு, தோள்மேல் ஒரு நீண்ட துண்டையும் அணிந்திருந்த ஆஸ்ரம

செயலாளர் வந்து முன்னாள் வந்திருந்த கடிதங்களுக்கு எழுதப்பட்டிருந்த பதில்களுக்கு பகவானின் ஒப்புதலைப் பெற அவரிடம் காண்பிப்பார். பகவான் அந்த வரைவுப் பதில்களைக் கவனமாகப் படித்து, தேவையான இடங்களில் திருத்தங்களைச் செய்து, பின்னர் ஒவ்வொன்றிற்கும் உரிய உறையில் இட்டுத் தருவார். பகவானது திருத்தங்களை ஒட்டி பதில் கடிதங்களை எழுத, செயலாளர் எடுத்துச் செல்வார்.

இங்ஙனம் ஆஸ்ரமத்தின் ஒவ்வொரு நாள் நடவடிக்கையும் முடிவுற்று, அமைதியும் சாந்தியும் நிலவியது.

# இனிவரும் திருநாட்கள்
## 2017

| | | | |
|---|---|---|---|
| *ஏப்ரல்* | 24 | *திங்கள்* | *பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 67வது ஆராதனை* |
| *மே* | 20 | *சனி* | *மஹாபூஜை* |
| *ஜூலை* | 05 | *புதன்* | *பசு லக்ஷ்மி தினம்* |
| | 08 | *சனி* | *குரு பூர்ணிமா* |
| | 01 | *வெள்ளி* | *அருணை விஜய தினம்* |
| *செப்டம்பர்* | 21 | *வியாழன்* | *நவராத்திரி விழா தொடக்கம்* |
| | 29 | *வெள்ளி* | *சரஸ்வதி பூஜை* |
| | 30 | *சனி* | *விஜயதசமி* |

மேற்கண்ட விழா நிகழ்வுகளின் மாற்றங்களை அறிய ஆச்ரம இணையதளம் www.sriramanamaharshi.org பார்க்கவும்

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் – 2017

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *மே* | 10 | *புதன்* | *அதிகாலை* 1:46 | 11 | *வியாழன்* | *அதிகாலை* 3:27 |
| *ஜூன்* | 8 | *வியாழன்* | *மாலை* 5.24 | 9 | *வெள்ளி* | *மாலை* 7.31 |
| *ஜூலை* | 8 | *சனி* | *காலை* 8.45 | 9 | *ஞாயிறு* | *காலை* 10.26 |
| *ஆகஸ்டு* | 6 | *ஞாயிறு* | *இரவு* 11.32 | 7 | *திங்கள்* | *இரவு* 11.55 |

*பாடல் 80:*

பேதம்அல இவ்வுலகம் பிரம்மமயம் என்றுஅறிந்தும்
பூதமய மாய்த்தோற்றல் போகாதது ஏதுஎனவே

*பொருள்: பொய்யாகத் தோன்றுகின்ற இவ்வுலகம் பிரம்மத்திற்கு, வேறாக இல்லை; அது பிரம்ம வடிவமே என்று அறிந்தபின்னரும் அது ஐம்பூத மயமாகவே தோன்றுகின்ற இந்தத் தவறானகாட்சி போகாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?*

*பாடல் 81: கண்ணன்:*

*கானலைநீர் என்றுஓடிக் கண்டவர்க்குத் தீர்ந்தபின்னும்*
*வான்உலவு நீர்ஆகி வயங்குதல்போல் என்றவரோ*

*பொருள்: பாலைவனத்தில் சூரிய வெப்பத்தால் தோன்றும் கானல்நீரை, தண்ணீர் என்று கருதிப் பருகச் சென்று அதை அடைந்தவுடன், அது நீர் அல்ல; கானலே இவ்வாறு தோன்றுகின்றது என்று அறிந்து கொண்டவர்க்கும்கூட, அம்மயக்கம் நீங்கிய நிலையிலும், மீண்டும் தொலைவில் இருந்து பார்க்கும்போது, அது நீரோட்டம் இருப்பதுபோலவே பொய்த் தோற்றம் அளிக்கிறது. அதுபோலவே, இவ்வுலகம் பிரம்ம மயம் என்று அறிந்த பின்னரும், அது வியவாரிக நிலையில் பஞ்சபூத வடிவமாய் மீண்டும் தோன்றுகிறது.*

*இதனை வேதாந்தத்தில் ‘ம்ருக த்ருஷ்ணா நியாயம்’ அல்லது மரு மரிசிகா நியாயம் என்று கூறப்படும். ம்ருகம்=மான். த்ருஷ்ணா=தாகம். மான்கள் தாகத்தோடு இருக்கும்போது, தூரத்தில் தெரியும் கானலை நீர் என்று எண்ணி, குடிப்பதற்காக ஓடித் தண்ணீர் கிட்டாமல் சோர்வுறும். அதுபோலவே பூரண ஆத்மஞானம் இல்லாதவர்கள் உலகப் பொருள் இன்பத்தைத் தருவதாக எண்ணி, சிரமத்துடன் உழைத்து உழைத்து அப்பொருட்களை அடைந்தபின்னரும்*

இன்பம் உண்டாகாமல் துன்பத்திலேயே உழல்வது. சத்குருவின் உபதேசத்தால் 'இது உண்மையல்ல' என்று துர்சங்கமாகத் தெரிந்த பின்னரும், மீண்டும் அஞ்ஞானம் என்னும் பாசி மெய்யறிவாகிய தெளிந்த நீரை மீண்டும் வந்து மூடிக்கொள்கிறது.

*பாடல் 82: அர்ஜுனன்:*

*அறிவானும் நல்லறவும் அறியப்படும் பொருளும்*
*பிறிவாய் மூன்றாய்இருத்தல் பேதம்அலவோ எனவே*

*பொருள்: (முன்பு நீங்கள் 77ஆவது பாடலில் பிரம்மம் ஒன்றே உள்ளது. இரண்டு பொருளே இல்லை. ஜீவனும் உலகமும் பிரம்மத்திற்கு வேறாய்இல்லை. வேறாகத் தோன்றும் பேதம் பொய்யே. இப்பேத உணர்வே துன்பத்திற்குக் காரணம் என்று சொன்னீர்கள்). ஆனால் உலகத்தைக் காண்பவனாகிய அறிவான் எனப்படும் ஜீவனும், அவ்வுலகினை அறியும் அறிவும், அறியப்படும் பொருளாகிய உலகமும் வேறு வேறாய்த் தானே காணப்படுகிறது. இது, 'அனைத்துமே பிரம்மம்' என்று நீங்கள் சொன்னதற்கு விரோதம் அல்லவா?*

வேதாத்தத்தில் திரிபுடி எனப்படும் கருத்தை இங்கே அர்ஜுனன் வினவுகிறான்.

*அறிவான்: பொருளைக் கண்டோ, கேட்டோ அறிபவன் (செடியைப் பார்ப்பவன், கருத்தைக் கேட்பவன் போன்று)*

*அறிவு: பார்த்த அல்லது கேட்ட பொருளைப் பற்றிய உணர்வு அல்லது அறியும் தன்மை*

*உதாரணம்: இது நாற்காலி என்று அறிதல்*

*அறியப்படும் பொருள்: நாம் அறிகின்ற நாற்காலி எனும் பொருள்*

*பாடல் 83:*

*சொப்பனத்தில் தனித்துஒருவன் தோற்றம்வேறு இல்லைஅங்கே*
*கற்பனையாம் பொருள்அறிவு காண்பவன்போல் என்றவரோ*

பொருள்: தனியாகப் படுத்துத் தூங்குகின்ற ஒருவனுக்குக் கனவில் பல சம்பவங்கள் நிகழ்கின்றன. பலரைச் சந்திக்கிறான். அவனது கனவில் காணப்படுகின்ற அறிவான், அறிதல், அறியப்படும் பொருள் என்று உள்ள திரிபுடியாகிய தோற்றம், படுத்துத் தூங்குகின்ற அவனுக்கு வேறாக இல்லை. விழித்தபிறகு அவன்தான் இருக்கிறான். வேறுஎதுவும், யாரும் இல்லை. அவன் கனவில் கண்ட பொருட்களும், காண்கின்ற அறிவும், காண்பவனும் ஆகிய மூன்றுமே கற்பனையாகத் தோன்றுவதே ஆகும். அந்தக்கரணத்தில் புதைந்து கிடக்கும் எண்ணங்களே கனவாக உரு எடுத்தான். திரிபுடியாய்த் தோன்றும் பேதம் அனைத்தும் கற்பனையே.

*பாடல் 84: அர்ஜுனன்:*

கற்பனையாம் பேதங்கள் காணாமல் போம்வகையை
பிற்பனமாய் நான்அறிய விளம்பும்எனவே வணங்க

பொருள்: பொய்க் கற்பனையாய்த் தோன்றும் திரிபுடியாகிய பேதங்கள் தோன்றாமல் நீங்கும்படிக்கான வழியை அடியேன் தெளிவாய் அறியும்படி கூறியருள்க என அர்ஜுனன் வணங்க

*பாடல் 85: கண்ணன்:*

துரியம்ஆம் யோகத்தால் தூயமனம் லயம்ஆனால்
அரிய மூவகைவிகற்பம் அழியும்என்று சொன்னவரோ

பொருள்: (ஆழ்துயில், கனவு, விழிப்புநிலை என்னும் மூன்று அவஸ்தைகட்கும் அப்பாற்பட்ட) துரிய நிலையை நாடி, தன்மயமான நிதித்யாசன யோகப் பயிற்சியால் தூய்மையான மனம் பிரம்மத்தில் ஒடுங்கினால், மூன்றுவிதமான திரிபுடி (நாதா, ஞேயம், ஞானம்) மறையும்.

*பாடல் 86: அர்ஜுனன்:*

சிறந்துஇருக்கும் ஆன்மாவும் செகம்எல்லாம் நிறைந்துஇருந்து
மறைந்துஎனக்குத் தோன்றாத வகைஏது சொல்லும்என

பொருள்: சச்சிதானந்தமாய் சிறந்து இருக்கும் ஆத்மா, பிரபஞ்சம் முழுதும் நிறைந்து இருந்தாலும், எனக்கு ஏன் புலப்படாமல் உள்ளது என்பதை விளக்கி அருளுக.

*பாடல் 87: கண்ணன்:*

*சத்துச்சித்து ஆனந்தம் தாம்மூன்றும் அதன்உடனே*
*ஒத்துற்று நாம உருவம் சகம்ஆகி*

*பாடல் 88:*

இருக்கையினில் தோன்றாது இவைமூன்றும் பிரம்மம்என
மரிக்கில்வரும் பின்இரண்டு மறிசகம்என்று உரைத்தவரோ

பொருள்: 87 & 88: சத்து, சித்து, ஆனந்தம் என்று சொல்லப்படும் (இருப்பு, பேரறிவு, ஆனந்தம்) ஆகிய மூன்றும் ஆத்மாவின் சொரூபம் ஆகும். இந்தமூன்றுடன் நாமம், உருவம், என்னும் இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து இவ்வுலகம் தோன்றுகிறது.

இவற்றைப் பாகுபடுத்தி உணரும் தன்மை இல்லாதவர்க்கு அந்த ஆத்மா விளங்காது. சத், சித், ஆனந்தம் ஆகிய மூன்றும் ஆத்ம சொரூபம் ஆகும். பின்னர் சொல்லப்பட்ட நாம, ரூபம் இரண்டும் ஆத்மாவை நாம் உணர ஒட்டாமல், தடுக்கும் பிரபஞ்ச சொரூபம் என்று பாகுபடுத்தி, ஆராய்ந்து பார்த்தால் ஆத்மாவை அறியலாம்.

*பாடல் 89: அர்ஜுனன்:*

அறிந்துகொள்ஞானத்தாலே ஆன்மாவை என்றுஉரைத்தீர்
சிறந்துஒளிரும் ஆன்மாவும் திருசியமாமோ எனவே

பொருள்: அபரோக்ஷ ஞானத்தினால் ஆத்மாவை உணர்ந்து கொள் என்று கூறினீர்கள். சச்சிதானந்த மயமாய் விளங்கும் ஆன்மாவும் காட்சிக்குரிய பொருள் ஆகுமா?

(தொடரும்)

# ரமணாயனம்

**க்ரேஸி மோஹன்**

*ஜாடியில் வைத்த சிவகடாட்ச ஊறுகாய்*
*வாடாது பாதாள வாயிலுக்கு - மூடியாய்*
*தானுகந்தான் தன்னை தவத்திரு சேஷாத்ரி*
*ஞானியின்கால் ஞானம் அறிந்து....(61)*

*[இளையஞானி பகவான் பாதாள லிங்கக் குகையில் தன்னில்தானே ஆழ்ந்திருந்தபோது அதன் வெளியே காத்திருந்தார் சேஷாத்திரி ஸ்வாமிகள் என்பதைக் குறிப்பிடும் பாடல்]*

*வேதாளப் பையன்கள் விக்கிர மாதவத்தை*
*சேதாரம் செய்ய சகியாது -பாதாளம்*
*போன முதலியார் பார்த்தார் இருளிலும்*
*ஞானக் கதிரவனை நன்கு....(62)*

*[விக்கிர மாதவம் = வெற்றி பொருந்திய ஞானத்தவம்]*

*பிராமண சாமியை பத்திரமாய்த் தூக்கி*
*கிராமத்து மக்கள் கொணர்ந்து -பராமரிப்பாய்*
*புண்ணான மேனிக்கு பாலா பிஷேகமாய்*
*உண்ணா முலையாள் உணவு....(63)*

*வாகன மண்டபத்தில் வில்வ மரத்தடியில்*
*பூகனக்கும் நந்த வனப்புதரில் -மோகனமாய்*
*யாகாவா ராயினும் நாகாத்(து) இருந்தனன்*
*தேகான்ம பாவம் தொலைத்து....(64)*

*சிவகங்கைத் தீர்த்தம் கவனத்தை ஈர்க்க*
*அவனங்(கு) இலுப்பை இடத்தில் -தவசிங்கம்*
*ஒத்திருந்த வேளையில் மெத்தப் படித்தவராம்*
*உத்தண் டிநயினார் உற்று....(65)*

*உய்யென்று வீசி உறையவைக்கும் காற்றுக்கு*
*கையென்ற கம்பளியால் மெய்போர்த்தி -அய்யன்*

*நயினார் நவில்கின்ற நூல்களின் ஞான*
*வெயிலில் விடுத்தார் விறைப்பு....(66)*

*[உத்தண்டி நயினார் இதுவரை பகவான் பார்த்தும் இராத பல தமிழ்த் தத்துவ நூல்களைக் கொணர்ந்து பொருள் வினவ, இளைய பகவான் அவற்றிற்கு விளக்கம் கூறியதைக் குறிக்கம் பாடல். இளைய சுவாமி, கௌபீனத்தைத் தவிர வேறு உடையே இராததால், குளிர்காற்றைத் தடுக்கத் தன் கையாலேயே உடலை மூடிக் கொள்வாராம்]*

*வாசித்தார் கைவல்யம் வாசிஷ்ட யோகங்கள்*
*ஆசிரிய ருக்கே அறிவுரையாய் -தேசிகன்*
*கூடலில் பெற்றதைக் கற்றான் அருணையில்*
*தேடல் தொலைந்தபின் தேர்வு....(67)*

*[கைவல்ய நவநீதம் முதலிய வேதாந்த நூல்களை இங்ஙனம் பகவான் படித்து, உத்தண்டி நயினார்க்குப் பயிற்றுவித்தார். தான் மதுரை மாநகரில் மரணானுபவத்தில் மூலம் பெற்ற ஞானத்தை, அருணை மாநகரில் இங்ஙனம் வேதாந்த நூல்களைப் படித்தபின், 'நான் முன்பு பெற்ற அனுபவம் இக்கைவல்ய ஞானமே' என்று உறுதி பெற்றார்.]*

*தேவாரம் ஓதும் திருவருணைத் தம்பிரான்*
*நாவார வேண்ட நயினாரும் -ஏ,வாரும்!*
*ஆசானே என்றுரைக்கப் பேசாது போயமர்ந்தார்*
*வாசம் குருமூர்த்தம் வந்து....(68)*

*தென்முகத்தோன் , நந்தி தொடர்ந்து சனத்குமாரர்*
*மண்ணில் பரஞ்சோதி மெய்கண்டார் -சொன்ன*
*சிவஞான போதத்தைச் சேர்ந்தகுரு மூர்த்தம்*
*தவமானோர் தங்கும் தரு....(69)*

*[தென்முகத்தான்=தட்சிணாமூர்த்தி. அவர்தம் சீடர்களாக நந்தியெம்பிரான் சனத்குமாரர், பரஞ்சோதியார், மெய்கண்ட சிவம் போன்றோர் அளித்த*

*சிவஞான போதத்தின் உறைவிடமான குருமூர்த்த சந்நிதியில் பகவான் தங்கி இருக்கலானார்]*

**பழைய சினேகிதனைப் பார்த்தகுரு மூர்த்தம்**
**உழலும் எறும்புகள் ஊர்ந்து -கழலைப்**
**பிடித்து பகவானின் பேரருளை வேண்டி**
**கடித்ததில் கூலி கரும்பு....(70)**

*[அனாதியான சற்குருவே இவன் என்று உணர்ந்துகொண்ட எறும்புகள் பகவானின் காலைப்பற்றிக் கடிக்கத் தொடங்கி உடல் முழுவதும் அரவணைத்து அவன் பேரருளாம் கரும்பினைப் பெற்றன]*

**முக்காலி போட்டு முழுமுதலை அவ்வறையில்**
**உக்கார வைத்தாலும் ஊர்வனகள் -நிக்காது**
**அண்டைச் சுவரேறி அய்யனின் குண்டலினித்**
**தண்டில் வடம்பிடித்த தாம்....(71)**

*[இதனைத் தடுக்க, சுவர் ஓரத்தில் ஒரு முக்காலி போட்டு, இளைய பகவானை உட்கார வைத்தபோதும்கூட அந்த எறும்புகள் சுவரின்மேலேறி, அவர் முதுகுத் தண்டில் ஊர்ந்து, கடித்து, குண்டலினை உயர்வை அனுபவித்தன]*

**தம்பிரான் பாலெண்ணை தேனென்(று) அபிஷேகச்**
**சொம்புடன் வந்தங்கு சேர்ந்ததை -எம்பிரான்**
**கண்டு சுவற்றில் கரியால் ”இதற்கென்றும்**
**தொண்டிதுவே” என்றார் தடுத்து....(72)**

*[பகவானுக்கு பால், எண்ணெய், தேன் அபிஷேகம் செய்யவந்த அன்பரைத் தடுத்து, மௌனசுவாமியாம் பகவான், “இதற்கு ஒருவேளை உணவளித்தால் போதும். அதுவே பெரிய சேவை ஆகும்” எனச் சுவரில் கரியால் எழுதிவிட்டார்]*

**கோலத்து மாவுண்ண கூடும் எறும்புகளாய்**
**பாலொத்த சேயை பெருந்திரளாய் -கால்இத்துப்**
**போனாலும் கண்டார் , பிராமண சாமிமுகம்**

*கோணாமல் வீற்றிருந்தார் கொலு....(74)*

*[பகவானைக் காணப் பெருந்திரளாய் பக்தர் கூட்டம் வந்தது]*

*அய்யன் குளப்பிள்ளை ஆனை முகனார்க்கு*
*பையனாய் வாழ்ந்த பழனிசாமி -மெய்யன்பு*
*பூண்டு ரமண பணியே பலனாக*
*ஆண்டிருபத் தோரிருந்தார் அங்கு....(75)*

*[விநாயக பக்தரான பழனிசாமி, பகவானிடம் சரண் அடைந்து இருபத்தோரு ஆண்டுகள் பணிபுரிந்தார்]*

*ஆன்மா ருசிகண்ட ஆனை ரமணர்க்கு*
*ஊண்மா ருசியொழிந்து ஓய்ந்ததால் -வான்மேவும்*
*ஊட்ட அமிழ்தையும் உண்பார் அடியார்தம்*
*கூட்டான் சோறில் கலந்து....(76)*

*[ஆத்ம ஞானத்திலே ருசிகண்ட பகவான், உணவுப் பண்டங்களின் வெவ்வேறு சுவைகளைச் சற்றும் கருதாது, அமிர்தமே வந்தாலும் அதையும் கூட்டாகக் கலக்கி, சுவை அறியாது உண்டார்]*

*கண்ணணைக்கும் ஆர்வமும் பெண்ணணைக்கும் ஆசையும்*
*உன்னிணக்கம் சோற்றில் உழலுவதால் -சொன்னார் (அன்னமய)*
*அழகாய் குமர குருபரர் கூற்றைப்*
*பழக பகவான் பிறப்பு....(77)*

*[குமரகுருபரர் கூறியது: "பெண்ணாசை, எழிலாசை போன்ற பலவும் பசிதீர்ந்த பின்னரே முளைக்கும்." பகவான் உணவு ஆசையையும் விட்டவர்]*

*விடாக்கண்ட அய்யரென்ற வேங்கட ராமன்*
*தொடாக்கண்டு அன்னத்தை, பேச்சு -கொடாக்கண்டர்*
*"வேங்கடராமன், திருச்சுழி" என்றெழுதி*
*ஆங்கிலத்தில் வைத்தார் அவர்க்கு....(78)*

*[நீங்கள் யாரென்று கூறாவிடில் இறுதிவரை உபவாசம் இருப்பேன் என அன்பர் வற்புறுத்தியதால், பகவான், 'வேங்கடராமன், திருச்சுழி' எனத் தன்னை வெளிப்படுத்தினார்]* *(தொடரும்)*

# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்

### ஸ்ரீ வித்யா ஹோமம்

ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் முதல் வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ ரமணாச்ரமத்தில் ஸ்ரீ வித்யா ஹோமம் நடைபெற்று வருகின்றது. வழக்கம்போல் இவ்வாண்டு 17/3/2017 இந்த ஹோமம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

காலை 7 மணிக்குத் துவங்கி மாலை 3 மணி வரை பூஜைகள் நடந்தன. அதில் நவாவர்ண பூஜை, ஹோமம், சுமங்கலி பூஜை, கன்யா பூஜை, பூர்ணாஹுதி மற்றும் தீபாராதனை நடைபெற்ற பின்னர் கலசங்களில் தீர்த்தங்கள் கொண்டு செல்லப்பட்டு பகவான் மற்றும் தாயார் ஆலயங்களில் அபிஷேகங்கள் மற்றும் தீபாராதனைகள் நடைபெற்றன.

பக்தி சிரத்தையுடன் வெகுசிறப்பாக நடைபெற்ற இந்த ஹோமத்தில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு அன்னை திரிபுர சுந்தரியின் அருளைப் பெற்றனர்.

### ஸ்ரீரமண கேந்திரம், ஒட்டன்சத்திரம்

உலக மக்கள் அனைவரும் நலமுடன் வாழவும், வறட்சியால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் எல்லாம் மக்களின் தேவைக்கு மழைபொழியவும் பகவானைப் பிரார்த்தித்து 27 நட்சத்திரங்களையும் வரிசைப்படி பிரார்த்தித்து 'ஸ்ரீஅருணாசல அக்ஷரமண மாலை' 27 முறை 12-1-2017 அன்று தொடர் பாராயணமாகப் பாராயணம் செய்யப்பட்டது. காலை 5.50 முதல் நண்பகல் 2.50வரை 9 மணிநேரம் தொடர் பாராயணம் நடைபெற்றது. பக்தர்கள் பலர் கலந்துகொண்டனர். பக்தர்களுக்குக் காலை, மதியம்

உணவும் ஸ்ரீஅக்ஷரமணமாலை புத்தகம், பகவான் படம், லட்டு அடங்கிய பிரசாதப் பை வழங்கப்பட்டது.

## 67ஆவது ஆராதனை விழா செய்திகள்

### 24-4-2017, திங்கட்கிழமை

ஸ்ரீ ரமணாச்ரமத்தில் காலை மங்கள இசையுடன் துவங்கி சிறப்பு அபிஷேக, ஆராதனைகள், வேதபாராயணங்கள் மற்றும் சிறப்பு அலங்காரங்களுடன் பகவான் சமாதி சந்நிதியில் பூஜை நடைபெற உள்ளது. விழாவினை முன்னிட்டு சிறப்பு விருந்தும், இசைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

### ஸ்ரீரமணாலயம், குரோம்பேட்டை

காலை மங்கள இசை, வேதபாராயணம், அஷ்டோத்திர பூஜைகளுடன் தொடங்கி காலை 9.30 மணியளவில் 'திருவாசக செந்நாவலர்' சத்குருநாத ஓதுவார் அவர்களின் 'ரமண சந்நிதிமுறை' இசைநிகழ்ச்சி நடைபெறும். மதியம் 11.30 மணியளவில் சிறப்பு விருந்து பிரசாதமாக வழங்கப்படும்.

### முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

காலை சிறப்புப் பூஜை, அக்ஷரமணமாலை பாராயணம் மற்றும் சிறப்புப் பிரசாதமாக மதிய உணவு கலந்துகொள்ளும் அனைவருக்கும் வழங்கப்படும்.

மேலும் மதுரை ரமண மந்திரம், திருச்சுழி சுந்தர மந்திரம் மற்றும் சூளைமேடு ரமண சத்சங்கம் போன்ற மையங்களிலும் ஆராதனை விழா 24-4-2017 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பெறும்.

### ரமண சத்சங்கம், வரசித்தி விநாயகர் பிரவசன மண்டபம், நங்கநல்லூர்

ஞாயிற்றுக்கிழமை 30 மாலை 5 மணிக்கு வேதபாராயணம், அக்ஷரமணமாலைப் பாராயணம்,

ஈரோடு பாலாஜி பாகவதர் அவர்களின் அக்ஷரமண மாலை விரிவுரையும் நடைபெறும்.

### ரமண சத்சங்கம், வேலூர்

14-4-2017, வெள்ளிக்கிழமை, வேலூர் சண்முகன் அடியார் சங்க வளாகம், லாங்கு பஜார், வேலூரில் மாலை 5 மணிக்கு பெரியார்தாசன், ச. லக்குமிபதி, தியாகராஜன், சிதம்பர குற்றாலம் ஆகியோரது சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெறும். விழா நிறைவில் அருட்பிரசாதம் வழங்கப்பெறும்.

## பாலி மண்டபம்

“ஒரு சமயம் குஞ்சு ஸ்வாமியின் காலில் ஒரு கட்டி உண்டாகி, அது பழுத்து அவருக்குத் தாங்க முடியாத வலியைத் தந்தது. வலி தாங்காமல் அவர் கதறி அரற்றிக் கொண்டிருந்தார். ஆச்ரமத்தார் அவரை எதிரிலிருந்த மண்டபத்தில் கொண்டு வைத்து கவனித்துக் கொண்டனர். அதே சமயம் பன்றியால் வயிற்றுப் பாகத்தில் கடிபட்டிருந்த ஆச்ரம நாய் ஜாக்கியும் அங்கு படுத்திருந்தது. பன்றியுடன் போட்ட சண்டையில் அதன் குடல் வெளியே வந்து, ஆபரேஷன் செய்து அநேக தையல்கள் போட வேண்டி வந்தது. நோயாளிகளைப் பார்க்க மண்டபத்திற்கு பகவான் வந்ததும், குஞ்சு ஸ்வாமி அவர் காலில் விழுந்து கதறினார். மனமிரங்கிய பகவான், குஞ்சு ஸ்வாமியிடம், ”ஜாக்கியைப் பார்! அத்தனை பெரிய ஆபரேஷனுக்குப் பிறகும் எவ்வளவு பொறுமையாக வலியைப் பொறுத்துக் கொண்டிருக்கிறான் என்றார் ஆதரவுடன். பகவானின் இதமான இந்த வார்த்தைகளைக் கேட்டதும் குஞ்சு ஸ்வாமிக்கும் வலியைத் தாங்கும் சக்தி வந்துவிட்டதுபோல் தோன்றியது. பகவான் ஜாக்கியை அன்புடன் தடவிக் கொடுத்துவிட்டு, குஞ்சு ஸ்வாமியை சாப்பிட்டாகிவிட்டதா என்று பரிவன்புடன் விசாரித்து விட்டு, இரு நோயாளிகளிடமிருந்தும் விடைபெற்றார்.”

- ‘ஸ்ரீ ரமண நினைவலைகள்’ நூலிலிருந்து.



ஸ்ரீரமணாச்ரமத்திற்கு எதிரேயுள்ள இம்மண்டபம் தற்பொழுது திருவண்ணாமலை சாந்திமலை நிறுவனத்தாரால் புனரமைக்கப்பட்டு மார்ச் 9ஆம் தேதியன்று புனருத்தாரண பூஜை செய்யப்பட்டு தினசரி பூஜை, அபிஷேக, அலங்காரங்களும் நடைபெற்று வருகிறது. பகவானுடைய வாழ்க்கை வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட மீனாட்சி சுந்தரேஸ்வரர் சந்நிதியும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.



## ஸ்ரீ சுப்ரமணியன், மணலூர்பேட்டை சாஸ்திரிகள்

*ஸ்ரீ சுப்ரமணியன், மணலூர்பேட்டை சாஸ்திரிகள் 11 ஜனவரி 2017 அன்று பகவானது ஜெயந்திக்கு முன்தினம் தனது 88ஆம் வயதில் அருணாசல ரமண பதமடைந்தார். இவர் பகவான் ரமணர் மற்றும் சேஷாத்திரி சுவாமிகளைத் தரிசிக்கும் பேறுபெற்றவர்.*



*தனது 41 வருட ஆசிரிய பணியில், ஆயிரக்கணக்கான கிராமத்து மாணவர்களுக்கு கணிதம் மற்றும் ஆங்கிலம் போதித்து வந்ததுடன் வாழ்க்கைத் தத்துவங்களையும் போதித்தார். இதன்பொருட்டு தனக்கு வந்த பதவி உயர்வுகளையும் துறந்து ஒரு முன்மாதிரி ஆசிரியராகத் திகழ்ந்தார். இவர் சிறந்த காந்தியவாதியுமாவார்.*

*திருவண்ணாமலையிலிருந்து 30 கிலோமீட்டர் தொலைவிலுள்ள மணலூர்பேட்டை கிராமத்தில், முன்பு ஒருமுறை காஞ்சி பரமாசார்யாள், சதுர்மாஸ்ய விரதம் அனுஷ்டித்த ஒரு சிறிய குடிசையில் 50 வருடங்கள் வசித்து வந்தார்.*

*ஸ்ரீரமணாச்ரமத்தில் நடைபெறும் பெரும்பாலான வேதபாராயண நிகழ்வுகளில் பங்கேற்றுவந்தார். மேலும் கோடி அர்ச்சனை, முருகனார் இயற்றிய ரமண சந்நிதி முறையை 1000 முறைக்குமேல் முற்றோதல் செய்துள்ளார். அக்ஷரமணமாலையை லட்சம் முறைக்குமேல் பாராயணம் செய்து ஹோமமும் செய்தார். தனது ஓய்வுதிய பலன் முழுவதையும் ரமணேஸ்வர மஹாலிங்கத்தின் மீது சாற்றப்படும் தங்கக் கவசம் செய்ய அர்ப்பணித்துள்ளார். அன்னாரைப்*

பிரிந்துவாடும் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் 'ரமணோதயம்' ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## ரமண சரண பக்தர் ஸ்ரீமதி ஹம்ஸா ராமையா

ரமண பக்தர்கள் குடும்பத்தில் வந்த ஸ்ரீமதி ஹம்ஸா ராமையா 14/1/2017 சனிக்கிழமையன்று அதிகாலை சுமார் 4 மணி அளவில் பகவானின் திருவடியை அடைந்தார். அவருக்கு வயது 92.

ஸ்ரீமதி ஹம்ஸா ராமையாவின் பாட்டனார் திரு. மனவாஸி ராமசாமி அய்யர், ஸ்ரீமதி ஹம்ஸா ராமையாவின் தாயார் ஸ்ரீமதி ராஜம்மாள் நீலகண்டன் அவர்களும் பகவானின் பரம பக்தர், சிறு வயதிலிருந்து பகவானுடன் பேசி விளையாடியவர். ஸ்ரீமதி ஹம்ஸா ராமையாவின் மாமா, சென்னை ரமண கேந்திரா தலைவர் திரு வேங்கட கிருஷ்ணன் ஆவார்.



ஹம்ஸா ராமையா பகவானுடன் சிறுவயதிலிருந்தே பேசிப் பழகும் பாக்யத்தையும் பெற்றவர். நல்ல குரல் வளம் கொண்ட இவர் வீணை மீட்டுவதிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். அகில இந்திய வானொலியில் கச்சேரிகள் நிகழ்த்தியுள்ளார். இவர் பகவான்மீது சில பாடல்களை இயற்றி மெட்டும் அமைத்துள்ளார்.

செப்டம்பர் 5, 1943 இல் இவர், திருவண்ணா மலையில் Chief Medical Officer ஆக இருந்த, Dr. நாராயண அய்யரின் பேரன், திரு. H. ராமையாவை திருமணம் செய்து கொண்ட கையோடு ஆச்ரமம் வந்து, ஹாலில் நுழைந்தவுடன், பகவான், "இதோ மீனாட்சி சுந்தரேஸ்வராளே வந்துட்டாளே" என்றார். (அச்சமயம்

அங்கு அத்தெய்வத் திருமணத்தைப் பற்றிய பேச்சு நடந்து கொண்டிருந்தது). அத்தம்பதியர்க்கு பகவானின் அச்சொற்கள் ஆச்சரியத்தையும், பரமானந்தத்தையும் அளித்தது. இதை அவர்கள் அடிக்கடி நினைவு கூர்வதுண்டு.

அன்னாரைப் பிரிந்துவாடும் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் 'ரமணோதயம்' ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## ஸ்ரீ சுப்பாரராவ்

அக்கராஜு வேங்கடசுப்பாராவ் அவர்கள் 16 பிப்ரவரி 1929ஆம் வருடம் ராமலக்ஷ்மி-கிருஷ்ணசுவாமி தம்பதியர்க்கு மூத்த மகனாகப் பிறந்தார். இளம் வயதிலேயே சிறந்த ஆசிரியராகப் பணியாற்றியதுடன் ஓரியண்ட் லாங்மென்ஸ், பென்குயின் பதிப்பகம் (UK) ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதியாகப் பணியாற்றினார்.

இவர் பகவான் ரமணரின்பால் மிகவும் ஈடுபாடு கொண்டவர். காவ்யகண்ட கணபதி முனிவரின் முக்கிய சீடரான திரு. பத்மநாப சுவாமி அவர்களிடம் மந்த்ரோபதேசம் பெற்றவர்.

பள்ளி மாணவர்களுக்கு ரமண பகவானின் கருத்துக்களைக் கொண்டுசெல்லும் வண்ணம் சுமார் பத்தாண்டுகளுக்குமேல் சென்னை மற்றும் புறநகர் அனைத்துப் பள்ளிகளையும் தொடர்புகொண்டு



ரமண பஜன் மற்றும் பேச்சு, எழுத்துப் போட்டிகளையும் சென்னை ரமண கேந்திரத்தின் சார்பாக நடத்திவந்தார். 2004 ஆண்டு நடைபெற்ற ரமண ஞானரதயாத்திரையின்போது தென்சென்னையிலுள்ள அனைத்துப் பள்ளி மாணவர்களும் பங்கேற்ற

*மாபெரும் அக்ஷரமணமாலைப் பாராயணத்திற்காக தனது முதிர்ந்த வயதிலும் சிறந்த பணியாற்றினார். அன்னார் தனது 82ஆவது வயதில் 18 பிப்ரவரி அன்று அருணாசல ரமண பதமடைந்தார். அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் ரமண கேந்திரா, மைலாப்பூர் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

## ஸ்ரீ கௌரிசங்கர்

*ஸ்ரீரமணாச்ரம வேதபாடசாலையின் தலைமை அத்யாபகர் ஸ்ரீ செந்தில்நாத கனபாடிகளின் தகப்பனார், ஸ்ரீ கௌரிசங்கர் 28 மார்ச் 2017 அன்று காலை அருணாசல ரமண பதமடைந்தார். அன்னாருக்கு வயது 78. பகவான் ரமணர், சேஷாத்ரி சுவாமிகள், காஞ்சி பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் யோகிராம் சூரத்குமார் போன்ற மகான்களின் தீவிர பக்தரான இவர் கடந்த 14 வருடங்களாக அருணாசல வாசியாக இருந்து வந்தார். 27-3-2017 அன்று ஸ்ரீரங்கத்திற்குச் சென்றிருந்தபோதிலும், அருணாசலத்திற்குத் திரும்பி வந்து 28 ஆம் தேதியன்று காலை 10 மணியளவில் ரமண பதமடைந்தார். பகவான் சமாதிமுன்பு இவர் அன்பர்களுடன் பக்திக் கதைகளையும், சத் விஷயங்களையும் பகிர்ந்துகொண்டு இருந்ததை நம்மில் பலர் கண்டிருக்கலாம்.*



*அன்னாரைப் பிரிந்துவாடும் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் 'ரமணோதயம்' ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | ......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | ......... | 9940418375 |
| **குரோம்பேட்டை,** *ரமணாலயம்* | ........ | 9444261296 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | ........ | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | ........ | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | ........ | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | ........ | 24790635 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | ........ | 9884355454 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | ........ | 9444172623 |
| **புதுச்சேரி** ரமண கேந்திரம் | ........ | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | ...... | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | ........ | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | ........ | 9442004615 |
| **மலையாண்டிபட்டினம்** பாலசுப்பிரமணியம் | ........ | 9965622878 |
| **பொள்ளாச்சி** ரமண குமார் | ........... | 9487016880 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | ........ | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | ........ | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | ........ | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | ....... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | ........ | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | ......... | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | ......... | 9486576687 |
| ஓசூர் அசோக்குமார் | ......... | 8643842772 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.

# BHAGAVAN SRI RAMANA MAHARSHI

# 67th Aradhana Celebrations

Seminar on the Life & Teachings of Sri Bhagavan on Saturday 7th May 16
at Tatvaloka Auditorium 76, Eldams Road, Teynampet, Chennai - 18. Tel : 2432 8124 / 5 / 6

## Program

| | | |
|---|---|---|
| 2.30 - 3.00 p.m. | : | **VEDAPARAYANAM** |
| 3.00 - 3.25 p.m. | : | Invocation by<br>**Smt. AMBIKA KAMESHWAR** |
| 3.25 - 3.35 p.m. | : | **SEMINAR** |
| Compere | : | **Mrs. VASANTHA RAGHAVAN** |
| Welcome Address | : | **Dr. S.RAMMOHAN,**<br>Vice President - Ramana Kendra Trust |
| 3.35 - 4.05 p.m. | : | **"ஆத்ம விசாரம் என்கிற ரமண வழி"** - by<br>**"WRITER KRISHNA"** |
| 4.05 - 4.50 p.m. | : | Inaugural Address by -<br>**Swami VIMURTHANANDA MAHARAJ,**<br>Sri Ramakrishna Mutt, Chennai. |
| 4.50 - 5.05 p.m. | : | **TEA BREAK** |
| 5.05 - 5.45 p.m. | : | **"அன்பிற்கு அழிவில்லை காண்"**<br>- by **Dr. VA VE SU**<br>(Former Principal, Vivekananda College) |
| 5.50 - 6.30 p.m. | : | "அந்தர் முகயத்திரா"<br>- by **Dr. RAMASUBRAMANIAN, IIT** - Bambay |
| 6.35 - 7.15 p.m. | : | **"யாதெனின் யாதெனின் நீங்கியான்"**<br>- by Isaikavi Ramanan |
| | | **MANGALAM** |

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

